# விடுதலைப்புலிகள்

குரல் 17 | ஆவணி - புரட்டாதி 1990 | அன்பளிப்பு : 5 ரூபா


# பிரேமதாசா அரசாங்கம் எதிர்கொள்ளும் நெருக்கடி

## போரைத்தொடர முடியாது திண்டாட்டம்

**சிங்களப் பேரினவாத அரசு என்றுமில்லாதவாறு பெரியதொரு பொருளாதார நெருக்கடியை சந்தித்து நிற்கிறது. தமிழீழ மக்களுக்கு எதிராக நிகழ்த்தி வரும் யுத்தத்தால் ஏற்பட்டுவரும் பாரிய செலவினங்களும், வளைகுடா நெருக்கடியால் தோன்றிய வர்த்தகச் சிக்கல்களும் சிறிலங்காவின் பொருளாதாரத்தை ஆட்டம் காணச் செய்திருக்கிறது. இந்த நெருக்கடியான நிலைமை காரணமாக யுத்தத்தை நீடித்துச் செல்ல முடியாமல் பிரேமதாசா அரசு திணறிக்கொண்டிருக்கின்றது.**

முப்படைகளின் முழுப்பலத்தையும் பிரயோகித்து மிகக் குறுகிய காலகட்டத்தில் தமிழீழம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, விடுதலைப் புலிகள் இயக்கத்தை முற்றாக அழித்து விடலாமென திட்டம் தீட்டிய சிங்கள அரசு இன்று இராணுவ ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பெரியதொரு நெருக்கடியை எதிர்கொண்டு நிற்கிறது. இராணுவ ரீதியாக சிங்கள அரசு தீட்டிய திட்டங்களை எல்லாம் விடுதலைப் புலிகள் இயக்கம் முறியடித்துள்ளது. தமிழீழத்தை ஆக்கிரமித்த இராணுவம், நகரமுடியாது புலிப்படை வீரர்களின், முற்றுகையில் சிக்கி முகாம்களுக்குள் முடங்கிக்கிடக்கிறது. எந்தக் காலத்திலும் தனது இராணுவ இலக்குகளை அடைய முடியாது என்பதையும், புலிகள் இயக்கத்தை அழிப்பது ஒருபொழுதும் நடைபெறப் போவதில்லை என்பதையும், பொருளாதார ரீதியில் நீண்டகால யுத்தத்தை நடத்துவது நடைமுறைச் சாத்தியமான காரியமல்ல என்பதையும் உணர்ந்து கொண்ட பிரேமதாசா அரசு இன்று செய்வதறியாது திணறிக்கொண்டிருக்கிறது.

நாளொன்றுக்கு 5 கோடி ரூபாவை யுத்தத்திற்கென செலவுசெய்யும் அதேவேளை புலிகளின் தாக்குதல்களினால் தனது யுத்த தளபாடங்களில் கணிசமானவற்றை சிறிலங்கா அரசு இழந்தும் வருகின்றது. இதுவரை நாளும் நடந்த சண்டைகளில் ஒரு யுத்த விமானத்தையும் ஆறு பவள் கவச வாகனங்களையும் சுமார் 30 இராணுவ வண்டிகளையும் 10 ற்கும் மேற்பட்ட கடற்படையின் விசைப்படகுகளையும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆயுதங்களையும், இலட்சக்கணக்கான ரூபாய்கள் பெறுமானமுள்ள வெடிமருந்துகளையும், முற்றாக இழந்துவிட்டது.

அத்துடன் 3 ஹெலிகொப்டர்களும், 2 கடற்படைக்கப்பல்களும் பாரிய சேதத்துக்குள்ளாகியுள்ளன.

இதன் காரணமாக இனி வரும் நாட்களில் சிறிலங்கா அரசின் இராணுவ செலவீனங்கள் முன்பைவிட பல மடங்கு அதிகரிக்கப் போகின்றது.

செலவீனங்கள் இந்த வழிகளில் அதிகரித்துச்செல்லும் அதேசமயம் சிறிலங்கா அரசின் வருமானத்திலும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுக் கொண்டு வருகின்றது.

3ஆம் பக்கம் பார்க்க


# கோட்டையில் புலிகளின் வீர காவியம்!

## விடுதலைப் போரில் ஒரு புதிய திருப்பம்

**107 நாட்கள் முற்றுகைப் போரில், சிங்கள முப்படைகளின் மும்முரமான தாக்குதல்களை எல்லாம் முறியடித்து, யாழ்ப்பாணக் கோட்டையை மீட்டெடுத்த வரலாற்று நிகழ்வானது, விடுதலைப் புலிகள் படைத்த ஒரு மகத்தான வீர காவியமாகும். இந்த மாபெரும் இராணுவ வெற்றி தமிழீழ விடுதலைப் போரில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.**

யாழ்கோட்டை முற்றுகைப் போரானது சிங்கள ஆயுதப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் நிகழ்ந்த ஒரு மூர்க்கமான இராணுவப் பலப்பரீட்சையாக அமைந்தது. இந்தப் போரில் சிங்கள முப்படைகளும் கூட்டாகச் சேர்ந்து என்றுமில்லாதவாறு தமது முழுப் பலத்தையும் பிரயோகித்தன. தினமும் அலையலையாக வந்த போர் விமானங்கள் புலிகளின் காவல் அரண்கள் மீது பல்லாயிரம் தொன் குண்டுகளை வீசின. கடலிலிருந்து நாசகாரிகள் பீரங்கிக் குண்டுகளைப் பொழிந்தன. கோட்டையிலிருந்து எறிகணைகள் ஏவப்பட்டன. இத்தனை குண்டு வீச்சுக்களையும் எதிர்கொண்டு ஒரு அங்குல நிலத்தையும் விட்டுக் கொடாது, புலிப்படை வீரர்களும் வீராங்கனைகளும் உறுதி தளராது போரிட்டனர். இறுதியில் சிங்கள இராணுவம் ஒரு பெரிய படையெடுப்பை மேற்கொண்டு புலிகளின் முற்றுகையை முறியடிக்க முனைந்தது. இந்தப் படையெடுப்பு படுதோல்வியில் முடிந்தது. பாரிய இழப்புகளுடன் சிங்கள இராணுவம் பின்வாங்கி ஓடியது இறுதியில் புலிகளின் வீராவேசத் தாக்குதலால் கோட்டையிலிருந்து படை

3ஆம் பக்கம் பார்க்க



கோட்டையின் உட்புற வாசலில் புலிக்கொடி பறக்கின்றது

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# புலிகளின் குரல்

## தமிழீழத்துக்கான அங்கீகாரமும் உலக நாடுகளும்

தமிழீழத்தை எந்த நாடு அங்கீகரிக்கும் என்று ஓர் கேள்வி எப்போதும் எழுவதுண்டு.

உலக நாடுகளைப் பொறுத்தவரை தமிழீழம் என்ற ஓர் நாட்டை அங்கீகரிக்க அவை இன்னும் ஆயத்தமாக இல்லை. அதேவேளை தமிழர்களின் போராட்டம் நியாயமானது என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று உலகில் ஏறத்தாள 52 நாடுகளில் எமது விடுதலை இயக்கத்தின் கிளைகள் இயங்கி வருகின்றன. பல நாடுகளில் எமது கிளைகள் மறைவான ஒருவித அங்கீகாரத்தைப் பெற்றிருக்கின்றன.

உலக நாடுகள் எவ்வகையில் செயற்படுகின்றன என்பதை முதலில் அறிந்து கொண்டால் இந்த அங்கீகாரம் குறித்த எமது கேள்விக்கு முழுமையாக இயலாது போனாலும் திருப்தியளிக்கக்கூடிய பதிலை நாம் பெறலாம்.

உலகப் பார்வைகள் இரண்டுவகைப்படும்.

1. உலக நாட்டு மக்களின் பார்வைகள்
2. உலக நாட்டு அரசுகளின் பார்வைகள்

உலகநாட்டு மக்களைப் பொறுத்தவரை பெரும்பாலும் அவர்கள் நீதியை, நியாயத்தை, தர்மத்தை மதிப்பவர்களாகவே இருப்பார்கள்.

உலகநாட்டு அரசுகளைப் பொறுத்தவரை, அவை தமது அரச நலனில் மட்டுமே அக்கறையாக இருக்கும். அவை நீதி, நியாயம், தர்மம் என்று எல்லாம் பார்ப்பதில்லை. இன்று உலகின் பலம் வாய்ந்த நாடுகளின் கருத்துக்களே உலக மக்களின் கருத்துக்களாகக் கருதப்படுகின்றன.

உண்மையில் பெரும்பாலான சமயங்களில் அவை உலக மக்களின் கருத்துக்களாக இருந்ததில்லை.

உலக நடப்புக்கள் தொடர்பாக ஒவ்வொரு அரசும் தமது சொந்த நலனின் பக்கமிருந்துதான் கருத்துக்கூறவும், செயற்படவும் செய்கின்றன.

ஆனால், அதேவேளை நீதி, நியாயம், தர்மத்தின் பாதுகாவலர் தானே என ஒவ்வொரு நாடும் தங்களைக் காட்டிக் கொள்கின்றன.

உலக நாடுகளில் பலவற்றில் மக்களுக்கு தகவல் தருகின்ற சாதனங்கள் எல்லாம் அரசின் கட்டுப்பாட்டின்கீழ், அல்லது அவர்களின் நோக்கங்களை ஒத்த தனிநபர்கள் அல்லது நிறுவனங்களின் கைகளில்தான் இருக்கின்றன.

இதனால் குறிப்பிட்ட சில வலுவுள்ள அரசுகளின் கருத்துக்களே 'உலகமக்களின் கருத்துக்களாக நினிக்கப்படுகின்றன. உண்மை நிலையை ஏதோ ஒரு வழியில் உணரும் வரையில் உலக மக்கள்பலரும் அக்கருத்துக்களைக் கொண்டவர்களாகவே இருப்பர்.

சில காலங்களுக்கு முன்புவரை பாலஸ்தீன விடுதலைப் போராளிகளை உலக அரசுகள் பயங்கர வாதிகளாகவே காட்டியது.

பாலஸ்தீன மக்களை அடக்கி ஒடுக்கி கொலை செய்யும் இஸ்ரேலைச் சேர்ந்த ஒருவன் பாலஸ்தீனர்களால் கொலை செய்யப்படும் போது அதை ஓர் வெறுக்கத்தக்க செயலாகவே உலக மக்களுக்கு காட்டப்பட்டது.

அதேவேளை நூற்றுக்கணக்கில் இஸ்ரேலியர்களால் கொல்லப்பட்ட பாலஸ்தீனர்களைப் பற்றிய செய்திகளும் இஸ்ரேலிய ஒடுக்குமுறைக்குள் படும்கஸ்டங்களும் மறைக்கப்பட்டன. இப்படியான தொடர்ச்சியான கருத்தோற்றங்களினால் உலக மக்கள் அக்கருத்தை ஏற்றுக்கொள்ளத் தொடங்கினர்.

காலப்போக்கில் அடக்கு முறையாளர்களான இஸ்ரேலியர்களின் இறப்புக்கள் மாபெரும் சம்பவங்களாகப் பார்க்கப்பட்டன. அதேசமயம் அடக்குமுறைக்குள்ளான பாலஸ்தீன மக்களின் பாரிய அழிவுகள் வெறும் புள்ளி விபரங்களாகவே உலக மக்களுக்குக் காட்டப்பட்டன.

ஆனால் இத்தகைய கருத்தேற்றங்களையும் வலிமை வாய்ந்த அரசுகளின் அழுத்தங்களையும் எதிர்கொண்டு தொடர்ச்சியாகப் போராடி அளப்பெரிய தியாகங்களைச் செய்த பாலஸ்தீன மக்களின் போராட்டத்தின் நியாயங்களை படிப்படியாக உலகமக்கள் உணரத் தொடங்கினர்,

இன்று ஈராக் குவைத்தை ஆக்கிரமித்து விட்டது என்று உலக நாடுகள் பல ஈராக்கிற்கு எதிராக பெரிய போருக்கு ஆயத்தமாகின்றன.

ஐக்கியநாடுகள் சபை விதித்த பொருளாதாரத் தடையை, படைப்பலத்தைப் பிரயோகித்து நடைமுறைப்படுத்துகின்றன.

இனவெறிபிடித்த தென்னாபிரிக்க அரசுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபை விதித்த பொருளாதாரத்தடைகளை மீறி இதே அரசுகள் தென்னாபிரிக்காவுக்கு கப்பல் ஓட்டிச்சென்று வர்த்தகம் செய்கின்றன

அதேபோல் பாலஸ்தீனத்தில் இஸ்ரேலிய அரசு செய்யும் பயங்கரவாத செயல்களை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை கண்டிப்பதற்கு அல்லது, அதற்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு இந்த நாடுகள் தடையாக இருக்கின்றன. இங்கே ஓர் நாட்டிற்கு தனது நலன்தான் முக்கியமே தவிர நியாயம் மனிதாபிமானம் அல்ல. தேவை ஏற்படும் பட்சத்தில் தனது வலிமையைப் பயன்படுத்தி தனது நலனைப் பாதுகாக்கவும் செய்கின்றன. அவ்விதம் செயற்பட்டு அதற்கு ஆயிரம் காரணம் காட்டும்; சொல்லும்.

1956இல் சீனா திபெத்தை ஆக்கிரமித்த போதும் 1979இல் சோவியத் குடியரசு ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தபோதும் 1981இல் கிரேனடா மீது அமெரிக்கா ஆக்கிரமிப்புப் போரை நடாத்தியபோதும் யாரும் இவர்களுக்கெதிராக படை எடுத்துச் சென்று நடவடிக்கைஎடுக்கவில்லை.

இன்று உலகில் தனது விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கும் விடுதலை இயக்கங்கள் பலவற்றை அங்கீகரித்து நிற்கும் இந்தியா தமிழீழப் போராட்டத்தை அங்கீகரிக்க மறுத்தது மட்டுமல்ல அழிக்கவும் முயன்றது.

ஆனால் அடக்கு முறைகளோடு இனப்படுகொலைகளுக்கெதிராகப் போராடும் ஒருதேசத்தின் போராடும் ஆற்றல், மனோவலிமை, ஒன்றுபட்ட மக்கள் ஆதரவு, போராட்டத்தில் அம்மக்களின் அளப்பரிய தியாகங்கள், எல்லாவற்றோடும் தனித்து வாழக்கூடிய ஆற்றலும் காலப்போக்கில் அம்மக்களின் போராட்டத்திற்கு அங்கீகாரத்தைப் பெற்றுத் தரும்.

வியட்நாமை அமெரிக்கா ஆக்கிரமித்த போது அமெரிக்க மக்கள் அதை ஆட்சேபிக்கவில்லை. அப்போராட்டத்தில் அமெரிக்கப் படைவீரர்கள் கொலைசெய்யப்பட்டபோது, அமெரிக்க மக்கள் வியட்நாம் மீது கோபம் கொண்டார்கள். படிப்படியாக வியட்நாமிய மக்களின் போராட்டத்தின் நியாயங்களையும் அமெரிக்கப் படையின் கொடுமைகளையும் அமெரிக்க மக்கள் தெரிந்துகொண்டனர். அத்தோடு அமெரிக்கப்படையினரின் பாரிய இழப்பும் அமெரிக்க மக்களின் வியட்நாம் குறித்த பார்வையை மாற்றியது.

இதைத் தொடர்ந்து அமெரிக்கப்படை வியட்நாமை விட்டு வெளியேறியது.

தென்னாபிரிக்காவில் நடக்கும் இனவெறிக் கொள்கைகள் படிப்படியாக உலக மக்களுக்கு தெரிய வந்தபோது பல நாடுகள் தமது தென்னாபிரிக்கா குறித்த நிலைப்பாட்டை மாற்றவேண்டி வந்தது.

இதன் தாக்கத்தை நாம் இன்று ஓர் சிறிய அளவில் தென்னாபிரிக்காவில் காண்கிறோம்.

இந்தியப்படை தமிழீழம் மீது போர் தொடுத்தபோது ஆரம்பத்தில் தமிழீழ மக்களுக்கு இந்திய இலங்கை ஒப்பந்தத்தால் ஏற்பட்ட நல்ல தீர்வை விடுதலைப் புலிகள் தமது சுயநலனுக்காக தடுக்கிறார்கள் என்றும் அவர்கள் அழிக்கப்பட வேண்டும் என்னும் கருத்தை இந்திய மக்கள் மத்தியிலும் உலக மக்கள் மத்தியிலும் இந்தியா வைத்தது.

ஆரம்பத்தில் அதில் வெற்றியும் பெற்றது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுதிமிக்க போராட்டமும், தமிழீழ மக்களின் ஒத்துழைப்பும் இப் போராட்டத்தால் இந்தியப் படைக்கு ஏற்பட்ட இழப்பும் படிப்படியாக இந்திய மக்கள் மத்தியில், உலக மக்கள் மத்தியில் இந்தியா மீது தனது சுயநலனுக்காக ஓர் நியாயமற்ற போரை நடாத்துகின்றது. நியாயமற்ற தீர்வை தமிழீழ மக்கள் மீது திணிக்கின்றது. என்ற பழியுணர்வை ஏற்படுத்தியது. இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேறினார்கள்.

எங்கும் எப்போதும் ஒரு நாட்டின் நலன் இன்னுமொரு நாட்டின் நலனோடு முரண்பாட்டுத் தன்மையைக் கொண்டிருக்கும்.

அதேபோல பதவியில் இருக்கும் அரசுக்கு எதிரான கட்சிகளில் உள்ளவர்கள் பதவியில் இருப்பவர்களை வெளியேற்ற அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாக தங்களைக் காட்டிக் கொண்டு குரல் கொடுக்கும் தன்மையையும் உலகில் காண்கின்றோம்.

இப்படியான முரண்பாடுகள் ஏதோவொரு வகையில், உடனடியாக இல்லாது போனாலும், காலப் போக்கில் உலக மக்களுக்கு உண்மையை உணர வைக்கின்றது.

தமிழீழப் போராட்டத்தைப் பொறுத்த வரை இதன் முழுமையான நியாயங்களும் இந்திய மக்களுக்குத் தெரியாது. இந்திய அரசைப் போல இந்திய மக்களும் தமிழீழத் தனிநாட்டிற்கு எதிரானவர்கள் அல்ல.

சிங்கள இனவாத அரசு என்றுமே மாறப் போவதில்லை. இதை உலக நாடுகள் அறியும்.

எம்மைப் பொறுத்த வரை தொடர்ந்தும் விடாப் பிடியாக இனவாத சிறீலங்காவுக்கு எதிராகப் போராடுவதன் மூலம், இனவாத சிறீலங்காவின் தங்கு நிலையிலிருந்து விடுபட்டு எமது சொந்தக் கால்களில் நிற்கக்கூடியவர்கள் என்பதைக் காட்டுவதன் மூலம்,

எமது போராட்டம் வளருமே தவிர அழியாது என்பதை நிரூபிப்பதன் மூலம், எமது நியாயமான வலிமை மிக்க போராட்டத்திற்கு உலக மக்களினதும் குறிப்பாக இந்திய மக்களினதும் அங்கிகாரத்தைப் பெறவேண்டும்.

உலகெங்கும் எட்டுக் கோடி தமிழர்கள் பரந்து வாழ்கின்றனர். அவர்கள் எல்லோரும் ஒருமனதாக எமது நியாயமான போராட்டத்திற்கு ஆதரவு தந்து செயற்படுவதன் மூலம் தமிழீழத் தனிநாட்டிற்கான அங்கிகாரம் கிடைக்கப் பெரிய உதவி செய்யலாம்.

எமது போராட்ட வரலாற்றின் ஒரு காலகட்டத்தில் வடக்கை ஒரு மாகாணமாகவும், கிழக்கை மூன்று மாகாணமாகவும் பிரிக்கும் ஓர் திட்டம் சிறீலங்காவால் முன் வைக்கப்பட்டது.

அதில் திருக்கோணமலை சிங்கள மாவட்டமாகவும், மட்டக்களப்பு தமிழ் மாவட்டமாகவும், அம்பாறை முஸ்லீம் மாவட்டமாகவும் பிரிக்கப்பட்டிருந்தது.

இத் திட்டத்திற்கு இந்திய அரசும் ஆதரவளித்தது. ஆனாலும் த. வி. புலிகள் ஏற்காததால் இத் திட்டம் கைவிடப்பட்டது.

பின்னர், கிழக்கு மாகாணத்தில் இருந்து சேருவில தேர்தற் தொகுதியையும், அம்பாறை தேர்தற் தொகுதியையும் பிரிக்கும் திட்டம் முன் வைக்கப்பட்டது. இதற்கும் இந்தியா சிறீலங்கா அரசுக்கு ஆதரவு கொடுத்தது. த. வி. புலிகள் எதிர்த்ததால் இத் திட்டமும் கைவிடப்பட்டது.

இதன் பின் வடக்கு - கிழக்கு தற்காலிகமாக இணைந்த மாகாணசபைத் தீர்வு முன் வைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்திற்கும் முழுஆதரவு தந்தது.

இதையும் த. வி. புலிகள் ஏற்காததால் அவையும் செயலிழந்து போய்விட்டன.

இன்று இதனிலும் ஒரு படி கூடிய திட்டம் பற்றி பேச்சுக்கள் அடிபடுகின்றன.

எமது விட்டுக் கொடுப்பற்ற, அளப்பெரும் தியாகங்களுடன் நடந்த எமது போராட்டத்தினால் தமிழீழம் நான்காகவோ, மூன்றாகவோ பிரிக்கப்படும்நிலை அல்லது தற்காலிக இணைப்பு என்ற நிலைக்கு எதிராக மட்டுமல்ல தமிழீழம், தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசம்தான் என்பதைச் சிறீலங்கா மட்டுமல்ல இந்திய அரசும் ஏற்றுக்கொள்ளும் நிலையும் ஏற்பட்டது.

எமது போராட்டத்தின் நியாயமான கோரிக்கைகளை இந்திய அரசு படிப்படியாக ஏற்றுக் கொள்ளவேண்டிய நிலை வருவதற்கு எமது இடைவிடாத, வளர்ச்சியை நோக்கிய போராட்டமே காரணமாகும்.

எம்மைப்பொறுத்தவரை நாம் எம்மில், எமது மண்ணில் நம்பிக்கை வைத்து உழைப்பதன் மூலம் சிறீலங்காவின் தங்கு பொருளாதாரத்தில் இருந்து விடுபட்டு எமது சொந்தப் பொருளாதாரப் பலத்தோடு வாழலாம். உலக மக்களுக்கும் குறிப்பாக இந்திய மக்களுக்கும் இவ்விதமாக வாழ்ந்து காட்டியபடி எமது போராட்டத்தைத் தொடர்வோமேயானால்,

இந்திய அரசுமட்டுமல்ல படிப்படியாக உலக அரசுகளும் எமது சுயநிர்ணய உரிமையை அங்கிகரிப்பதைத் தவிர வேறுவழியில்லாமல் போகும்.

# திருக்கோணமலைத் தளபதி பதுமனின் செவ்வி

1987ம் ஆண்டு ஐப்பசி மாதம் 5ம் திகதி பலாலியில் சயனைட் அருந்தி வீரமரணமடைந்த லெப். கேணல் புலேந்தி அம்மானிற்குப் பின்னர் திருக்கோணமலைத் தளபதியாக திரு. பதுமன் நியமிக்கப்பட்டிருந்தார்.

தமிழீழத்தின் தலைநகரான திருக்கோணமலையில் இன்று என்ன நிகழ்கின்றது என்பதையும் அந்த மக்கள் தமிழீழ விடுதலைக்காக எத்தகைய விலையைச் செலுத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் இந்தச் செவ்வி மூலம் தளபதி பதுமன் விளக்குகின்றார்.

கேள்வி:-

திரு பதுமன் அவர்களே உங்களுடன் வந்து திருமலை மாவட்டத்தைச் சுற்றிப்பார்த்ததில், எங்கும் வீடுகள் அழிக்கப்பட்டு இருப்பதையும், வீடுகளில் இருந்து பொதுமக்கள் வெளியேறிச் சென்றதையும் பொதுவாக பொதுசன நடமாட்டத்தையே காண முடியாத நிலைமையும் காண்கின்றோம். எனவே இம் மாவட்ட நிலைமையை சுருக்கமாகக் கூறுங்கள்?

பதில்:- கடைசியாக இங்கு ஏற்பட்டிருக்கும் சண்டையில் இராணுவத்துக்கு மிகப்பெரிய இழப்புகள் ஏற்பட்டு இருக்கின்றது. அவர்களுடைய குறி தமிழ்ப் பொதுமக்கள் மீது இருப்பதனால் தமிழ் மக்கள் ஒரு இடத்திலும் இருக்க முடியாமலும் அகதிமுகாங்கள் கூட உயிருக்குப் பாதுகாப்பு இல்லாத நிலையில் அங்கும் இங்கும் அலைந்து திரிவதினாலும் எமது மாவட்டம் வெறிச்சோடி இருக்கின்றது.

கேள்வி:-

தற்போதைய நிலைமையில் இந்த மாவட்டத்தில் தமிழ் மக்கள் இருக்கக் கூடிய இடம் என நீங்கள் எதைக் கருதுகிறீர்கள்?

பதில்:- நகர்ப் பகுதியில் மட்டும் ஒருசில தமிழ்மக்கள் இருக்கின்றனர். அவர்களும் அடிமை மாதிரித்தான் பணயக் கைதிகள் நிலையில்தான் உள்ளனர். இராணுவ பயங்கரவாதத்தினால் இந்தத் தொகையும் குறைந்து கொண்டே போகின்றது.

கேள்வி:-

அகதிமுகாங்களில் வாழும் மக்களின் நிலைபற்றிக் குறிப்பிட முடியுமா?

பதில்:- திருமலை மாவட்டத்தில் சகல கிராமங்களிலும் இருந்து குடிபெயர்ந்து 13க்கும் மேற்பட்ட அகதிமுகாங்களில் மக்கள் தஞ்சமடைந்துள்ளனர். அவர்கள் ஒரு இக்கட்டான துன்பநிலையில்தான் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். அங்கு முஸ்லிம் ஊர்காவல் படையினரும் இராணுவத்தினரும் பெண்களை பாலியல் வன்முறைக்குள்ளாக்குவதுடன் வயது வந்த ஆண்களைக் கைது செய்து இழுத்துக் கொண்டு போகின்றார்கள், இப்படிக் கொண்டு செல்லப்படுபவர்களைப் பற்றி எதுவும் கேட்க வேண்டாம் என்றும் இராணுவத்தினர் கூறுகின்றார்கள் இதனால் ஆண்கள் மறைவாகத்தான் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.



கேள்வி:-

சர்வதேச மனிதாபிமான உதவி வளங்கும் நிறுவனங்கள் ஏதாவது இந்த மக்களுக்கு உதவுகின்றனவா?

பதில்:- இல்லை. ஆனால் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் அகதிகளுக்கு உதவி வளங்குவதாகக் கூறுகின்றார்கள் உண்மையில் செஞ்சிலுவைச் சங்கத்தினர் பிரச்சாரப்படுத்தும் அளவுக்கு எந்த வித நிவாரணங்களும் வளங்கப்படவில்லை. முகாங்களில் பாதுகாப்பு இல்லாத காரணங்களால் காட்டுப் பகுதியில் அனேக குடும்பங்கள் கிழங்கு வகைகளையோ, இலைகளையோ சாப்பிட்டு நடைப் பிணங்களாக உலாவுகின்றனர். குழந்தைகளுக்கு பால்மா கிடைப்பதில்லை. சரியான மருந்துவசதி இல்லாமல் நோயினால் பலர் மடிந்துள்ளார்கள்.

பச்சைநூல் அகதிமுகாமில் 42 பேரை இராணுவத்தினர் 25. 8. 90 அன்று கைது செய்தனர். இவர்கள் நிலை என்னவென்றே தெரியாது. இதே போல கிண்ணியா, தம்பலகாமம் போன்ற இடங்களிலும் நடந்துள்ளது. பச்சைநூல்முகாமுக்கு முன் மிதிவெடிகளை வைத்து அகதி முகாம் மக்கள் இருவரை நடக்கச் சொல்லி இராணுவத்தினர் உத்தரவு இடவே இரண்டு பெண் பிள்ளைகள் 13.9.90 அன்று காலையும் கண்களையும் இழந்துள்ளார்கள். இந்த நிலையில் அகதி முகாம் வாழ்வு எத்தகையது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம். இச் சம்பவங்கள் எல்லாம் மூதூர் உதவி அரசாங்க அதிபர் மற்றும் செஞ்சிலுவைச் சங்கத்தினர் கண் முன்னிலேயே நடைபெற்றது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கேள்வி:-

தற்போதைய போரில் தமிழ் மக்களின் உயிர் இழப்பு திருக்கோணமலை மாவட்டத்தில் எவ்வளவென கருதுகிறீர்கள்?

பதில்:- சுமார் 500 இருக்கும். இதைவிட அகதிமுகாமில் 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் பற்றிக் கேட்க வேண்டாம் என இராணுவத் தரப்பில் பதில் அளிக்கப்பட்டது. இதைவிட அகதிகளாக நடந்து செல்கையிலும் வாகனங்களிலிருந்தும் இறக்கப்பட்டு பலர் காணாமல் போயுள்ளனர்.

கேள்வி:-

நாம் அவதானிக்கையில் திருமலை மாவட்டத்தில் மிகக் கிட்டிய தூரங்களுக்கிடையில் படைமுகாங்களின் வெளிச்சம் தெரிகின்றன இந்த மாவட்டத்தில் எத்தனை சிறீலங்காப் படைமுகாங்கள் உள்ளன?

பதில்:- மொத்தமாக 90க்கு மேற்பட்ட முகாங்கள் உண்டு. அதில் பொலிஸ் நிலையங்கள் 19. கடற்படைமுகாங்கள் 4. விமானப்படை முகாங்கள் 2 மற்றும் இராணுவ முகாங்கள் 65 இதைவிட முஸ்லிம் சிங்கள ஊர்காவல் படைக் காவல்நிலையங்களும் சிறிய முகாங்களும் உண்டு.

கேள்வி:-

தமிழீழ மக்களுக்கு எதிரான இப்போரில் முஸ்லிம் ஊர்காவல் படையின் பங்கு எத்தகையது?

பதில்:- முஸ்லிம் ஊர்காவல் படை தமிழ் மக்களுக்கு எதிராகத்தான் செயற்பட்டுக் கொண்டு வருகின்றனர். தற்போது ஆயுதங்கள் இவர்களுக்கு வளங்கப்பட்டு இருப்பதால் அகதிமுகாம் மக்களை இனம்காட்டிக் கொடுப்பதிலும் தமிழ்ப் பெண்களை மானபங்கப் படுத்துவதிலும் இவர்கள்தான் முன் நின்று தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டு வருகின்றார்கள்.

கேள்வி:-

இந்தப் போரில் திருமலை மாவட்டத்தில் தமிழ் மக்களின் பொருளாதார இழப்பு எவ்வளவு?

பதில்:- இந்தப் போரின் போது வெளியேறிய தமிழ் மக்கள் உடுத்த துணியைத் தவிர வேறு எதையும் எடுத்துச் செல்லவில்லை மூதூர் பகுதியில் மட்டும் 1057 வீடுகள் அழிக்கப்பட்டுள்ளது. தமிழரின் வேளாமைகள் மாடுகளினாலும் ஏனையவற்றினாலும் அழிக்கப்படுகின்றன. எஞ்சியவை இராணுவ பாதுகாப்புடன் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் அறுவடை செய்யப்பட்டு இராணுவ முகாங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. மீன் பிடித் தொழில் செய்வோரும் கடலுக்கு செல்வதில்லை. இவர்களின் வள்ளங்களும் வலைகளும் ஊர்காவல்படையினரால் பறிக்கப்பட்டுள்ளன, அரசாங்க தொழில் செய்வோரும் பயத்தினால் அந்தந்த தொழில் நிலையங்களுக்குச் செல்லாமல் வருமானம் இன்றி இருக்கின்றனர்.

கேள்வி:-

சிறீலங்காப் படையினருடனான முன்னைய போருக்கும் தற்போதைய போருக்கும் இடையில் காணப்படும் மாறுதல்கள் தொடர்பாக தங்களின் கருத்து என்ன?

பதில்:- இந்தப் போர் தொடங்கி குறிப்பிட்ட 3 மாத காலப்பகுதியில் மட்டும் திருமலை மாவட்டத்தில் 150க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டும் 100க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கால்களை இழந்தும் உள்ளனர். இவர்களிடம் இருந்து 100க்கு மேற்பட்ட ஆயுதங்களும் எம்மால் கைப்பற்றப்பட்டுள்ளன. இதில் இருந்து முன்னைய சண்டையை விட குறுகிய காலத்தில் பெரும் வெற்றிகளை இப்போரில் நாம் ஈட்டியுள்ளோம் என்பது புலனாகும்.

கேள்வி:-

திருமலையில் இருந்து வெளியேறிய மக்களுக்கு நீங்கள் என்ன கூறவிரும்புகின்றீர்கள்;

பதில்:- இராணுவ பயங்கரவாதத்தாலும் இன அழிப்பு நெருக்குதல்களாலும் நீங்கள் இந்த மண்ணைவிட்டு சென்று இருந்தாலும் இது எமது சொந்த மண் என்ற வகையில் எங்கிருந்தாலும் போராட்டத்துக்கு உங்கள் முழுமையான பங்களிப்பை வளங்க வேண்டும். இளைஞர்களும், யுவதிகளும் களத்தில் போராடுவதற்காக ஆயிரம் ஆயிரமாக எம்மோடு அணிதிரள வேண்டும், அதன்மூலந்தான் எமது மக்களின் துயர்படிந்த வாழ்வுக்கு விடிவு காணமுடியும்.

13ஆம் பக்கம் பார்க்க

## கோட்டையில்......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யினர் விரட்டியடிக்கப்பட்டனர். யாழ்- கோட்டை புலிகள் வசம் வீழ்ந்தது.

**யாழ்ப்பாணக் கோட்டை புலிகள் வசம் வீழ்ந்தமை தமிழீழ சுதந்திரப் போராட்டத்தில் ஒரு புதிய மகத்தான வரலாற்றுத் திருப்பத்தை எடுத்துக்காட்டுகிறது. சிங்கள பேரினவாத வல்லாதிக்கத்திலிருந்து யாழ் நகரப் பிரதேசம் முதற்தடவையாகவிடுதலையடைந்திருப்பதுடன் இந்த மாபெரும் வெற்றி எமது விடுதலை இயக்கத்தின் பாரிய இராணுவ வளர்ச்சிக்கும் ஒரு தலைசிறந்த உதாரணமாக அமைந்திருக்கிறது.** வீரமும், தியாகமும், கட்டுப்பாடும் இரும்பையொத்த மனவுறுதியும் படைத்த புலிப்படையை வெற்றிகொள்வது முடியாத காரியம் என்பதை கோட்டைப்போர் சிங்கள அரசுக்கு நன்கு உணர்த்தியிருக்கிறது. தமிழீழ தாயகத்தை மீட்டெடுத்து தனியரசை அமைக்கும் ஆற்றலும் போர் திறனும், இலட்சிய உறுதியும் புலிகளுக்கு உண்டு என்பதை இந்த வெற்றி எமது மக்களுக்கும் நன்கு உணர்த்தியிருக்கிறது.

## பிரேமதாசா......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வளைகுடா நெருக்கடி காரணமாக தேயிலை வர்த்தகத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எரிபொருட்களின் விலையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. சிறீலங்கா அரசின் தேசிய வருமானத்தில் பிரதான இடத்தை வகித்து வந்த தேயிலை ஏற்றுமதியில் 20 விகிதம் துண்டுவிழுந்துள்ளதினால் வருட வருமானத்தில் ஏறக்குறைய 300 கோடி ரூபாவை இழந்துள்ளது.

மேலும் வளைகுடாவில் (ஈராக், குவைத்) தொழில் புரிந்த ஆயிரக்கணக்கான இலங்கையர் வேலையிழந்ததினாலும் வெளிநாடுகளில் பணிபுரியும் பல்லாயிரம் தமிழர்கள் சிறீலங்கா அரசுக்கூடாக தமது பணத்தை அனுப்பவிரும்பாததினாலும், மாதாந்தம் இலங்கைக்குள் வந்து கொண்டிருந்த அன்னிய செலவாணியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அத்துடன் தமிழீழத்திற்கெதிராக விதித்த பொருளாதாரத் தடை காரணமாகத் தனது வருமானத்தில் கணிசமான பகுதியை இழந்ததுடன் தமிழீழத்தின் உற்பத்திப்பொருட்கள் கொழும்புச் சந்தையில் சென்றடையாததால் ஏற்பட்ட விலைவாசி ஏற்றங்களும் சிறீலங்கா அரசுக்கு பிரமாண்டமான பொருளாதாரச் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இராணுவ ரீதியாக தாம் நினைத்ததைச் சாதிக்க முடியாது தோல்வி அடையும் சூழ்நிலையில்.

பொருளாதார ரீதியாகத் தொடர்ந்தும் தாக்குப்பிடிக்க முடியாது திண்டாடும் நிலையில்,

அரசியல் ரீதியாகவும் சர்வதேசத்திலிருந்து நெருக்கடிகளையும் கண்டனங்களையும் எதிர்கொள்ளும் ஒரு இக்கட்டான நிலையில் பிரேமதாசாவின் அரசு செய்வதறியாது திணறுகின்றது.

இத்தகையதொரு நெருக்கடி நிலையில்தான் யாழ் - கோட்டை முகாமையும் சிறீலங்காப் படையினர் புலிகளிடம் பறிகொடுத்துள்ளனர்.

இந்த செய்தியை எவ்வளவுதான் திரித்து சிங்களமக்களுக்குக் கூறினாலும் சிறீலங்கா அரசின் கூற்றுக்களை ஏற்றுக்கொள்ள சிங்கள மக்கள் தயாராகவில்லை.

இதனால் பிரேமதாசாவின் அரசு சிறிலங்கா மக்கள் மத்தியிலும் செல்வாக்கிழந்து வருகின்றது.

இதனால் நசுக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஜே. வி. பி. யினரின் நடவடிக்கைகள் சிங்கள மக்களின் ஆதரவுடன் சிறீலங்காவில் புத்துயிர் பெற்றுக் கொண்டு வருகின்றது.

இவ்விதமாக நாற்புறத்திலும் சூழும் நெருக்கடிநிலை காரணமாக தமிழீழமக்களுக்கு எதிரான யுத்தத்தை தொடர்ந்தும் நடாத்திச் செல்ல முடியாமல் பிரேமதாசாவின் அரசு திண்டாடிக் கொண்டிருக்கின்றது.

செல்வராசா மாஸ்டர்...

எமது இயக்கத்திலுள்ள கூடுதலான போராளிகளுக்கு பரிச்சயமான ஒருவர்.

காரணம்: பல்லாயிரக்கணக்கான போராளிகள் அவராலேயே உருவாக்கப்பட்டனர்.

அவரிடம் நான் பயிற்சிபெறவில்லையே என்றதொரு ஏக்கம் அவரிடம் பயிற்சி பெறாதோருக்கு இருந்ததுண்டு. அவரிடம் பயிற்சி பெறாது விட்டாலும் பறவாயில்லை சில மாதங்கள் அவருடன்கூட இருந்தாலே போதும் என்று கருதும் போராளிகளும் உண்டு. அவர்களில் நானும் ஒருவன்.



# ஒரு போராளியின் குருதிச் சுவடுகள்...

1987ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்தியப் படைகளுடன் சண்டை ஆரம்பமாகி சுமார் 2 மாதங்களின் பின்னர் வன்னியிலுள்ள விஸ்வமடுக் காட்டிற்குள் இருந்த முகாம் ஒன்றிற்குள் அவருடன் இருந்தேன்.

1987ம் ஆண்டிற்கு முன்னர் சிறீலங்கா இராணுவத்துடனான சண்டைகளிலோ அல்லது முகாம் தாக்குதல்களிலோ அதிகளவில் தான் கலந்துகொள்ளவில்லை என்று செல்வராசா மாஸ்டர் சிறிது கவலையுடன் கூறுவார். அதற்குக் காரணம் போராளிகளை உருவாக்கும் பயிற்சியாளனாக செல்வராசா மாஸ்டர் தலைவரால் நியமிக்கப்பட்டது தான்.

ஆனால் இந்திய இராணுவத்துடனான சண்டைகளில் வட்டியும் முதலுமாக சேர்த்து பல சண்டைகளில் மாஸ்டர் கலந்து கொண்டிருந்தார். அதில் யாழ்ப்பாணத்திலுள்ள குளப்பிட்டிச்சந்தியில் இந்தியப்படைகளுடன் நடந்த சண்டை ஒன்றும், இணுவிலில் நடந்த சண்டை ஒன்றும் மாஸ்டரின் திறமையை பறைசாற்றிய தாக்குதல் சம்பவங்களாகும்.

குளப்பிட்டிச் சண்டை நடைபெற்ற நேரம் இரண்டு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணத்திலேயே நின்றிருந்தனர். ஒருவர் ''இந்தியா ருடே'' நிருபர் மற்றவர் பிரான்க பத்திரிகை ஒன்றின் நிருபர்.

இவர்கள் இருவரும் தாக்குதல் நடந்த இடத்துக்கு எமது போராளிகளால் கூட்டிச் சென்று காட்டப்பட்டனர்.

கொல்லப்பட்ட இராணுவத்தினது உடல்களும், கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் அவர்களுக்கு காட்டப்பட்டது.

இந்தியப் படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் எவ்விதம் சண்டைகள் நடைபெறுகின்றன என்பதை உலகம் முதலில் அறிந்தது இந்தச் சம்பவத்தின் மூலம்தான். இதை ஆதாரங்களுடன், படங்களுடன் வெளிநாட்டு நிருபர்களே கொடுத்தபோது உலகம் மூக்கில் விரலை வைத்தது.

இந்தத் தாக்குதலை எவ்விதம் தனது குழுவினர் செய்தனர் என்பதை மாஸ்டர் எமக்குச்செய்து காட்டுவார். அவ்விதம்தான் எதிரியுடன் சண்டை செய்யவேண்டும் என்று எமக்குக் கற்பிப்பார்.

இதில் 12 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். எமது தரப்பில் எவருமே இறக்கவில்லை.

அடுத்ததாக இணுவிலில் நடந்த ஒரு சண்டை, அதில் இந்திய அரசால் ''வீரசக்கார்'' என்ற உயர்ந்த இராணுவ விருது கொடுத்துக் கௌரவிக்கப்பட்ட இந்திய அதிகாரியான மேஜர் பரமேஸ்வரன் கொல்லப்பட்ட சம்பவமாகும்.

இந்தச் சண்டையைப்பற்றி மாஸ்டர் சொல்லும்போது கூறுவார் இணுவிலில் ஒரு இடத்தால் இராணுவ அணியொன்று முன்னேறிக்கொண்டிருந்தது. சுமார் 50 பேர் வரை அந்த அணியில் இருந்தனர்.

இவர்கள் ஒரு பனைக் கூடலுக்கால் வரும்போது எமது போராளிகள் தாக்குதலைத் தொடங்கினர். சண்டை நீண்டநேரம் நடந்தது. எமது பக்கத்தில் நிலை எடுத்துச் சண்டை செய்ய தகுந்த காப்பிடங்கள் இருக்கவில்லை. அப்படியிருந்தும் மாஸ்டரின் தலைமையில், தந்திரோபாயமும், துணிச்சலும் மிக்கவர்கள் மூலம் எதிரிகள் வீழ்த்தப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இறுதியில் 18 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டிருந்தனர். அதில் மேஜர் பரமேஸ்வரனும் ஒருவர். எமது பக்கத்தில் ஒரு போராளி வீரமரணமடைந்தார்.

முதல் இடம் கிடைக்குமென்று எமது போராளிகள் சொல்வார்கள். காட்டு முகாமில் இருக்கும்போது அடிக்கடி எமக்கெல்லாம் அறிவுரைகள் கூறுவார்.'

பொன்னம்மான், ராதா அண்ணையைப்பற்றி அடிக்கடி கூறுவார். குழப்படி செய்யும் போராளிகளைத் திருத்துவதில் மாஸ்டர் தனக்கே உரிய பாணிகளை வைத்திருக்கின்றார்.'

ஒருமுறை இரண்டு போராளிகள் தங்களுக்குள் சண்டை பிடித்துக்கொண்டு கதைக்காது இருந்தனர். அவர்கள் இருவரையும் அழைத்து ஒரு கோப்பையில் சாப்பாட்டை எடுத்துவந்து ஒருவர் மாறி ஒருவருக்கு ஊட்டுவித்தார் ''நாங்கள் எல்லோரும் சகோதரர்கள் போல இருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் சண்டையிடக்கூடாது'' என்று அறிவுரை கூறி அனுப்பினார்.

காட்டுக்குள் இருந்த காலகட்டத்தில் உணவுகளுக்கு பெருத்த தட்டுப்பாடு இருந்தது. அதுவும் இராணுவம் காடுகளுக்குள் இறங்கிய நேரங்களில் பட்டினியும் கிடந்திருக்கின்றோம்.

இரண்டையும் கலந்தபின் அது இரவு சமைத்த உணவு வகையாகவும் இராது. காலை சமைத்த உணவு வகையாகவும் இராது, ஏதோ புதியவொரு உணவாகவும் புதியதொரு சுவையாகவும் இருக்கும். பெருமூச்சு விட்டபடி அதை உண்போம்.

ஒருமுறை ''ஒப்பரேசன் திரிசூலம்'' என்ற பெயரில் நாம் இருந்த காட்டுப்பகுதியில் இந்திய இராணுவத்தினர் தேடுதலை நடாத்தினார்கள்.

அப்போது நடந்த சண்டையில் எமது இருப்பிடம் இராணுவத்திற்கு தெரியவர புதிய இருப்பிடத்தை தேடினோம்.

அந்தச் சமயங்களில் எம்மிடம் உண்பதற்கு எதுவுமே இருக்கவில்லை குடிக்க நீரும் கிடைக்கவில்லை.

அப்போது எமது ஒருநேர சாப்பாடு 3 'கிறீம் கிறேக்கர்' பிஸ்கற்றும், அரைகப் தண்ணீரும் தான். அதுவும் ஒரு நளைக்கு இரண்டு தடவை தான் உண்போம்.



வீரமரணம்: 27 - 8 - 1990

**மேஜர் செல்வராசா மாஸ்டர்**

**(அன்பு)**

சின்னத்துரை செல்வராசா

(காங்கேசன்துறை)

! ! !

இத்தகைய வெற்றிகரமான சண்டைகளில் ஈடுபட்டபின்னர் வன்னிக் காட்டிற்குள் முகாம் அமைத்துத் தங்கினார் காட்டுக்குள் இருக்கும்போது மாஸ்டர் சும்மா இருக்கமாட்டார். எப்பொழுதும் ஏதாவது ஒரு வேலை செய்து கொண்டிருப்பார். அப்படியான நேரங்களில் மாஸ்டர் சொல்வார்...

''...இயக்கத்திலுள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிமிடமும் ஏதாவது ஒரு வேலை செய்து கொண்டிருக்கவேண்டும். அது இயக்கத்திற்குப் பயன் உள்ளதாக இருக்க வேண்டும்.''

உடற்பயிற்சிப்போட்டியொன்று வைத்தால் இயக்கத்தில் மாஸ்டருக்குத்தான்

இந்த நிலையில் எந்த ஒரு உணவையும் உண்ணாது வீசுவதை மாஸ்டர் அங்கீகரிக்கமாட்டார். சிலவேளைகளில் இரவு உணவு அடுத்த நாள் காலையில் மீஞ்சியிருக்கும். அத்துடன் சேர்த்து ஏதோ ஒரு காலை உணவும் சிறிது சமைக்கப்படும்.

அந்தப் புதுஉணவுக்காக எமது மனங்கள் ஏங்கும். ஆனால் அது எல்லோருக்கும் போதாது என்பதால் பழைய உணவையும், புதிய உணவையும் கலந்துவிட்டு சரி இனி சாப்பிடுவோம் என்பார்.

அந்த நேரத்தில் எமது உடல் சோர்வடையும். ஆனால் உள்ளத்தில் சோர்வு ஏற்படாதவாறு மாஸ்டர் ஒவ்வொரு போராளியையும் ஊக்குவித்தார்.

மாஸ்ரரின் வீரமரணத்துக்கு நான்கு வாரத்துக்கு முன்னர் தான் ஒரு பயிற்சி முகாமை நடாத்தி முடித்திருந்தார்.

அப்போது மாஸ்டர் சொன்னார்......

''நான் பலாலிப்பக்கம் போகின்றேன் இனி நான் இறந்தாலும் பறவாயில்லை ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகளைநான் உருவாக்கிவிட்டேன். இதற்கெல்லாம் காரணம் பொன்னம்மான் தான் அவர்தான் என்னை உருவாக்கினார்.''

மாஸ்டர்வீர மரணமடைந்த அன்றுகூட திருக்கோணமலை

13ஆம் பக்கம் பார்க்க

**மாஸ்ரரின் பயிற்சி மாணவர்கள் சொல்கிறார்கள்...**

பயிற்சிக் காலகட்டத்தின் போது கட்டுப்பாடுகளைக் கருத்திலெடுக்காதும், ஒழுங்கின்றியும், குழப்படிகள் செய்து சிறுபிள்ளைத்தனமாகத் திரிபவர்களைப் பார்த்து அடிக்கடி மாஸ்டர் சொல்லுவார் ''...முதலில் உன்னை மனிதனாக்குகின்றேன் பிறகு போராளியாக்குகின்றேன்...''

★ ★ ★

நாம் காட்டு வாழ்க்கையைச் சந்திக்கப் போகின்றோம் காட்டின் சூழலுக்கு ஏற்றவிதத்தில் நாம் வாழ வேண்டும். பசி எடுக்கும். பட்டினிகிடக்க நேரிடும். களைப்பு எடுக்கும், தண்ணீர்கிடைக்காது. இவற்றுக்கு மத்தியில் எதிரி வருவான் நாம் உற்சாகத்துடனும் உறுதியுடனும் சண்டையிடவேண்டும்.

★ ★ ★

நாம் சமையலுக்கு என வைத்திருக்கும் பாத்திரங்கள் எல்லாம் சாக்கினால் சுற்றப் பட்டிருக்கும், அல்லது உருமறைப்பு வர்ணம் திட்டப்பட்டிருக்கும்..

இருமல், தும்மல், பலமாகசிரித்தல், சத்தம் போட்டுக்கதைத்தல் தவிர்க்கப்படும். அல்லது அந்த இடத்துக்கு மாஸ்டர் வந்து விடுவார்.

பானையும் கரண்டியும் மிக அவதானமாகக் கையாளப்படவேண்டும். ஒரு சத்தமும் எழக்கூடாது. சத்தத்தை மணத்தை எழுப்பக்கூடிய வறுவல். துவையல் இருக்காது.

குளிக்கத் தண்ணீர் இல்லை குடிப்பதற்கே ஒரு கோப்பைதான் தண்ணீர். ஆனால் துப்பாக்கிகள் எந்தநேரமும் துப்பரவாக இருக்கவேண்டும்.

★ ★ ★

காட்டுக்குள் மாஸ்டர் அடிக்கடி கூறுவார் சத்தமும், வெளிச்சமும் மணமும் இங்கே எமது எதிரி.

★ ★ ★

பலசந்தர்ப்பங்களில் நாம் நோயால் அவதியுற்றோம். காச்சலால் பலர் பாதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் மருத்துவ வசதி இருக்காது. வேதனை அதிகமாக இருக்கும். அந்த வேளைகளில்மாஸ்டர் அவர்களுக்கு அருகில் சென்று விடுவார். மனதுக்கு உற்சாகமூட்டும் கதைகளைக் கூறுவார், தாக்குதல் சம்பவங்களைக் கூறுவார். உடல் வேதனைக்கு இதமாக சதைகளைப் பிடித்து விடுவார். இவ்விதமாக யாரும் படுக்கையில் சத்தமிட்டு முனகாதவாறு செய்து விடுவார்.

போராட்டமே

# ~~கல்வியே~~ எதிர்காலத்தை நிர்ணயிக்கும்

**அன்பான தமிழீழ மக்களே!**

கோட்டை காவலரணில் கடந்த 29-8-90 அன்று வீரமரணமடைந்த பிரதிபன் என்ற போராளி தன்னுடன் வைத்திருந்த ஒரு எழுத்துக் கொப்பியின் முன் அட்டையில் இருந்த ஒரு வாசகம்தான் இத்தலையங்கம்.

கொப்பி முன் அட்டையின் மேற்பக்கத்தில் அச்சாகியிருந்த கல்வியே எதிர்காலத்தை நிர்ணயிக்கும் என்ற வாசகத்தின் முதற் சொல்லாகிய ''கல்வியே'' என்பதை வெட்டிவிட்டு ''போராட்டமே'' எதிர்காலத்தை நிர்ணயிக்கும் என்று திருத்தி எழுதியிருந்தார்.

மாணவனாக இருந்து போராட்டத்திற்கு வந்த ஒரு இளைஞனின் புதியபார்வையை இன்றைய இளைஞர்களின் முன் சிந்திப்பதற்காக வைக்கின்றேன்.

எதிர்காலத்தை நிர்ணயிக்கும் காரணி தொடர்பான இப்போராளியின் புதிய பார்வையானது இன்றைய காலகட்டத்திற்கு மிகச் சரியானது.

கல்வி மனித முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது என்பது உண்மையே.

ஒரு காலகட்டத்தில் தமிழ்மக்களில் கணிசமானவர்களின் பொருளாதார உயர்ச்சிக்கு வழிவகுத்ததும் கல்வியேதான்.

உயிர்ப்பாதுகாப்பிற்கான போராட்டங்கள் எதுவுமற்றிருந்த ஒரு காலகட்டத்தில் கல்வியும் அதன் வழிவந்த வேலை வாய்ப்புகளும் கணிசமான தமிழர்களின் எதிர்காலத்தை நிர்ணயித்தது என்பது உண்மைதான்.

ஆனால், இன்று இந்த மண்ணில் தமிழ் மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, உயிர் வாழ்வதற்கு ஒரு போராட்டத்தை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போராட்டத்திற்கு கல்வியும் அதன்மூலம் வந்த அறிவும் பயன்பட வேண்டும்.

எமது தமிழ்ச் சமூகம் இதுவரை காலமும் பெற்றுவந்த கல்வியும் அது வழங்கிய அறிவும் இன்றைய இக்கட்டான சூழலில் எமது மண்ணிற்கோ அல்லது எமது மக்களின் சுபீட்சமானசுதந்திர வாழ்வுக்கோ போதியளவு பயன்படவில்லை என்பது வேதனைக்குரியது.

எமது மக்கள் தமது சுதந்திரத்திற்காக ஆர்ப்பரித்தெழுந்து, இரத்தம் சிந்தியபோது எமது கல்வியானது திருப்திப்படக்கூடிய அளவுக்கு விடுதலைப் போராட்டத்திற்கு கைகொடுக்கவில்லை.

இக் கல்வி உருவாக்கிய இம் மண்ணின் மைந்தர்களான மருத்துவர்களும், பொறியியலாளர்களும், அறிவு ஜீவிகளும் சுதந்திரத்தைப் பிரசவிக்க எமது தமிழீழத்தாய் துன்பமுறும் போது அவள் அருகில் இல்லை. அவள் கொடுத்த கல்வியைப் பெற்று அறிவு உழைப்பாளர்களாக மாறியபின் தமிழீழத்தை விட்டே சென்றுவிட்டார்கள்.

இதை நியாயப்படுத்த ஆயிரம் காரணங்கள் சொல்லப்படலாம் அவை அனைத்தும் தமது பொருளாதார வாய்ப்புகளை போராட்டம் தடுத்து விட்டது என்ற நிலையில் போலியான அந்தஸ்துக்களைக் கட்டிக்காக்க முடியாமல் போகின்றது என்ற ஆதங்கத்தில் எழுந்த சுயநல காரணிகளாகவே இருக்கும்.

மாறாக, அந்தக் கல்வியை முறைப்படி பயின்றிராத போர்க்கள அனுபவத்தைப் பெற்ற மருத்துவர்களும், பொறியியலாளர்களும், தொழில்நுட்பவியலாளர்களும், சிந்தனைவாதிகளுமே இன்று தமிழீழத்தாயின் அருகில் நின்று அவளது இன்ப துன்பங்களில் பங்கெடுக்கின்றனர். சுதந்திரக்குழந்தையின் சுகப்பிரசவத்திற்காகப் பாடுபடுகின்றனர்.

உண்மை இவ்விதமாக இருக்கும்போது எமது மக்களின் எதிர்காலத்தை [இன்றைய காலகட்டத்தில்] கல்விதான் நிர்ணயிக்கின்றது எனக் கூறமுடியாது.

போராட்டமே எதிர்காலத்தை நிர்ணயிக்கின்றது.

நாம் இதுவரை காலமும் பெற்ற கல்வியும், அது தந்த அறிவும் தனி மனித முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டிருந்ததே அல்லாமல் சமூகமேம்பாட்டை இலக்காகக் கொண்டிருக்கவில்லை.

இதற்குக் காரணம் எமது கல்வியமைப்பை உருவாக்கியதும், நெறிப்படுத்தியதும் அந்நியர்களே என்பதுதான்.

அனைத்தையும் கருதியதுபோல கல்வியையும் தமக்குப் பயன்படும் உற்பத்திப் பொருளாகத்தான் அந்நிய ஆட்சியாளர்கள் கருதிச் செயற்பட்டிருந்தார்கள். சுதந்திர உணர்வுடன் இசைந்து போகாத கல்வியைத்தான் அன்னியர்கள் எமது மக்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் அதனால்தான் அந்தக் கல்வியானது இக்கட்டான நிலையில் எமது மண்ணிற்கும் மக்களுக்கும் கைகொடுக்கவில்லை. அத்துடன் பல சந்தர்ப்பங்களில் எமது விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான நிலைப்பாடையும் எடுக்கத் துணிந்திருக்கின்றது என்பதையும் கூறியே ஆகவேண்டும்.

இதனுடைய அர்த்தம் நாம் கல்வியை முற்று முழுதாகப் புறக்கணிக்கவேண்டும் என்பதல்ல.

எமது மண்ணிற்கும், மக்களுக்கும் பயன்படக் கூடிய வகையிலேயே அக்கல்வி இருக்கவேண்டும்.

இன்று போரின் மூலம்தான் தமிழ்மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய நிலையில் இருக்கின்றார்கள்.

போரிடாவிடின் எமக்கு வாழ்வில்லை.

எனவேதான் எமதுவிடுதலைப் போராட்டத்திற்கு உதவக்கூடிய கல்வியைத்தான் இன்றைய மாணவர்கள் பெறவேண்டும் போரை அடிப்படையாகக் கொண்ட கல்வியைத்தான் இன்றைய தமிழீழ மாணவர்கள் பெறவேண்டியுள்ளது.

இன்று எமது மக்களின் விடுதலைப் போராட்டமானது இதுவரை நாளும் எமது சமூகத்தில் இருந்து வந்த அன்னிய மனோபாவத்தை நியாயப்படுத்தும், அடிமை மனோபாவத்தை சகித்துக் கொள்ளும், போர்க்குணத்தை மறுக்கும் காலனித்துவ சமூக இயக்கத்தை குலைத்து வருகின்றது.

இது எமது விடுதலைப் போராட்டத்தின் உயர் வளர்ச்சியின் ஒரு விளைவு.

**பிரதீபன்**

**28-08-1990**

*றெக்சன்*

(எழுத்தூர் மன்னார்)

01. 07. 1974



சமூகவளர்ச்சியை நோக்கிய இம்மாற்றங்கள் நிகழ்ந்து வரும் இந்த இடைக்கால கட்டமானது சிலரால் ஏற்றுக் கொள்ள முடியாததும், சிலருக்கு நம்பிக்கையற்ற தன்மையையும் ஏற்படுத்துகின்றது என்பதை அறியமுடிகின்றது.

ஆனால், இந்த நம்பிக்கையற்ற தன்மையையும், ஏற்றுக்கொள்ளமுடியாத மனோபாவங்களையும் தாண்டி அந்த முற்போக்கான மாற்றங்கள்மெதுமெதுவாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

இதனால் சமூகம் பற்றிய புரட்சிகரமான பார்வைகளும்; புதிய சிந்தனை வீச்சுக்களும் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதன் வெளிப்பாடுதான்.

இந்த மண்ணின் விடுதலைக்காக தன்னுயிரை அர்ப்பணித்துவிட்ட 16 வயது நிரம்பிய இளம் போராளி பிரதீபனின் அதிஉயர் சிந்தனையாகும்.



# தமிழீழ சுதந்திரப் போர்


**சிறீலங்கா அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் இன்று நிகழ்ந்துவரும் போர் எத்தன்மை வாய்ந்தது? முந்திய போர்முறைகளுக்கும் இன்றைய யுத்த உத்திகளுக்கும் மத்தியிலான வேறுபாடுகள் என்ன? இராணுவ அமைப்பு ரீதியிலும் போருபாயத்திலும் புலிகள் இயக்கம் கண்டுள்ள மாபெரும் வளர்ச்சி எத்தகையது? தமிழீழ சுதந்திரப் போர் இராணுவ ரீதியில் எத்தகைய முன்னேற்றம் அடைந்துள்ளது? இந்த முக்கிய வினாக்களுக்கு விடையளிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.**

இன்று நிகழ்ந்து வரும் யுத்தம் ஏதோ ஒருசில மாதங்களுக்கு முன்னர் ஆரம்பித்ததாக சில வட்டாரங்களில் தவறான மதிப்பீடு ஒன்று இருக்கிறது. ஆனால், உண்மையில் இந்தப்போர் கடந்த 15 ஆண்டுகளாக நடைபெற்று இன்று என்றுமில்லாத அளவு விரிவாக்கம் கண்டிருக்கிறது. சிங்களப் பேரினவாத அடக்குமுறைக்கு எதிராக புலிகள் இயக்கம் தொடுத்த புரட்சிகர ஆயுதப் போராட்டம் இன்று இரு நாடுகள் மத்தியில் நிகழும் யுத்தமாக வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டிருக்கிறது. சிறீலங்கா என்ற சிங்கள நாடு தமிழீழம் என்ற அண்டை நாட்டுடன் போரிட்டு வருகிறது. இருநாடுகளதும் தேசிய இராணுவங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன. உண்மையில் இதுஒரு ஆக்கிரமிப்பு யுத்தம். சிங்களத் தேசத்து ஆயுதப்படைகள் தமிழ்த் தேசத்தை ஆக்கிரமித்திருக்கின்றன. இந்த அந்நியஆக்கிரமிப்புப் படைகளை தமிழ் மண்ணிலிருந்து விரட்டியடிக்கவே தமிழ்த்தேசிய இராணுவமாகிய புலிப்படை இந்த விடுதலைப்போரை நடாத்தி வருகிறது. இந்த விடுதலைப் போர் எப்பொழுதோ ஆரம்பமாகி இன்று முழு அளவு யுத்தமாக இரு நாடுகள் மத்தியிலான போராக விரிவடைந்திருக்கிறது.

தமிழீழ மக்கள் தமது அரசியல் தலைவிதியை எப்பொழுதோ நிர்ணயித்துவிட்டார்கள். சிங்களப் பேரினவாத அடக்குமுறையின் கீழ் அடிமைகளாக வாழவிரும்பாத எமது மக்கள் பிரிந்து சென்று, தனியரசு அமைத்துச் சுதந்திரமாக வாழவிரும்பினார்கள். 1977-ம் ஆண்டு, சர்வஜன வாக்கெடுப்பாக அமையப்பெற்ற பொதுத் தேர்தலில் இந்த வரலாற்றுத் தீர்மானம் எடுக்கப்பட்டது தேசிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அன்றில் இருந்து அரசியல் ரீதியாக தமிழீழம் தனிநாடாகப் பிரிந்துவிட்டது. சர்வதேச சட்டத்திற்கு அமைய, அரசியல் ரீதியாக நிகழ்ந்துவிட்ட இந்தப் பிரிவினையைச் சிங்கள அரசு ஏற்க மறுத்தது. தனியாகப் பிரிந்து சென்று தனியரசு அமைக்க முடிவெடுத்த தமிழீழத் தேசத்தை இராணுவ ஆக்கிரமிப்பு மூலமாக, அதாவது பலாத்காரமாக தனது ஆதிக்கத்தின் கீழ் இணைத்து வைத்திருக்க சிங்கள தேசம் முயன்று வருகிறது. இந்தப் பலாத்காரமான இணைப்பின் சின்னமாகவே சிங்கள ஆயுதப் படைகள் எமது மண்ணில் நிலைகொண்டிருக்கின்றன. இந்தப் பலாத்காரமான இராணுவ இணைப்பை உடைத்தெறியவே நாம் ஆயுதப் போராட்டத்தைநடாத்தி வருகிறோம்.

எனவே இன்றைய போர், சாராம்சத்தில், அந்நிய இராணுவ ஆக்கிரமிப்பிற்கு எதிரான ஒரு விடுதலை யுத்தமாகும். ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு தேசம், பிரிந்து சென்று தனியரசு அமைக்கத் தீர்மானித்த ஒரு தேசம் அந்நிய ஆக்கிரமிப்பாளனுக்கு எதிராகப் போராடுகிறது. ஆக்கிரமிப்பாளனும் தமிழீழத்தை ஒரு அந்நியநாடாக, தமிழீழ மக்களை அந்நியர்களாக, பகைவர்களாகக் கருதியே யுத்தத்தை நடாத்துகிறான். எனவே அரசியல் ரீதியாகப் பிரிந்து செல்ல எமது மக்கள் மேற்கொண்ட தீர்மானம் நடைமுறைச் சாத்தியமாவது எமது ஆயுதப் போராட்டத்தில்தான் தங்கியிருக்கிறது.

தமிழர் படையை மேலும் பலப்படுத்த வேண்டும். மேலும் நவீனமயப்படுத்த வேண்டும் என்பதே தலைவர் பிரபாகரனின் ஆசை. இந்த ஆசை நாளுக்கு நாள் பூர்த்தியடைந்து வருகிறது. ஒழுக்கம், கட்டுப்பாடு, வீரம், தியாகம் இத்தகைய பண்புகளைக் கொண்ட ஒரு மக்கள் இராணுவத்தைக் கட்டி எழுப்பி அதனை நவீனமான முறையில் ஆயுதமயப்படுத்துவதன் மூலமே தேசிய சுதந்திரத்தை வென்றெடுக்க முடியும் என்ற எமது தலைவரின் தீர்க்கதரிசனப் பார்வை இன்று நடை முறைச் சாத்தியமாகி வருகிறது.



போர் முறையிலும் போர் யுக்திகளிலும் எமது ஆயுதப் போராட்டம் கடந்த 15 ஆண்டுகால வரலாற்றில் பிரமாதமான வளர்ச்சிகண்டிருக்கிறது. நீண்டகாலமாக கெரில்லா (கரந்தடி) போர் முறைகளையும், யுக்திகளையும் கையாண்டுவந்த எமது விடுதலை இராணுவம் இன்று மரபுவழி யுத்தமுறையை (Conventional Warfare) மேற்கொள்ளும் அளவிற்கு பாரிய முன்னேற்றம் அடைந்திருக்கிறது. ஒரு தலைமறைவான கெரில்லா இயக்கமாக இருந்து இப்பொழுது ஒரு தலைசிறந்த தேசிய விடுதலை இராணுவமாக விடுதலைப்புலிகள் வளர்ச்சியும் முதிர்ச்சியும் அடைந்திருக்கிறார்கள். (திடீரென தாக்குதல்களை நடாத்திவிட்டு மறைந்துவிடும் கெரில்லா யுக்திகளை அன்று விடுதலைப்புலி வீரர்கள் கையாண்டு வந்தனர். இன்று பலம்வாய்ந்த இராணுவ முகாம்களை நேரடியாகத் தாக்கி அழிக்கும் வல்லமை பெற்றதாக புலிப்படை விளங்குகிறது.

தமிழீழ சுதந்திரப் போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஒரு முழு அளவிலான தேசிய விடுதலை இராணுவம் ஒன்றைக் கட்டிக் எழுப்ப வேண்டுமென எமது தலைவர் பிரபாகரன் நீண்ட காலமாக அயராது உழைத்துவந்தார். அவரது விடா முயற்சியின் பயனாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இன்று பல்லாயிரம் வீரர்களைக் கொண்ட ஒ.ந பலம் பொருந்திய இராணுவ அமைப்பாக உருவாகிவிட்டது. தமிழீழ மக்களின் பாதுகாப்பிற்கென தமிழ்த் தேசிய விடுதலை இராணுவம் அமைக்கப்பட்டுவிட்டது. இந்தத் தமிழர் படையை மேலும்பலப்படுத்த வேண்டும். மேலும் நவீனமயப்படுத்த வேண்டும் என்பதே தலைவர் பிரபாகரனின் ஆசை. இந்த ஆசை நாளுக்கு நாள் பூர்த்தியடைந்து வருகிறது. ஒழுக்கம், கட்டுப்பாடு, வீரம், தியாகம்-இத்தகைய பண்புகளைக் கொண்ட ஒருமக்கள் இராணுவத்தைக் கட்டி எழுப்பி அதனை நவீனமான முறையில் ஆயுதமயப்படுத்துவதன் மூலமே தேசிய சுதந்திரத்தை வென்றெடுக்க முடியும் என்ற எமது தலைவரின் தீர்க்கதரிசனப் பார்வை இன்று நடைமுறைச்சாத்தியமாகி வருகிறது.

நீண்ட போராட்ட அனுபவமும் புலிப்படையின் வல்லமைக்கு உரமிட்டிருக்கிறது. சிங்கள ஆயுதப்படைகளுடனும், அதற்குமுண்டுகொடுத்த உலக கூலிப்படைகளுடனும், பின்னர், உலகின் மிகப்பெரிய இராணுவமாகியஇந்திய இராணுவத்துடன் சண்டையிட்டும் பெற்ற போர் அனுபவம் விடுதலைப் புலி வீரர்களை உலகின் தலைசிறந்த தேசிய விடுதலை இராணுவமாக மாற்றியிருக்கிறது.

சமீப காலமாக நிகழ்ந்து வரும் போரில் சிங்கள அரசு வான்படையையும், கடற்படையையும் பெரிய அளவில் பயன்படுத்திவருகிறது. முன்பு ஒருபொழுதும் இல்லாத வகையில் சிங்கள வான்படை களத்தில் குதித்திருப்பதன் காரணம் என்ன? சிங்கள தரைப்படைகளால் புலிப்படையை சமாளிக்க முடியாது என்ற அப்பட்டமான உண்மையைத்தான் இது புலப்படுத்துகிறது. ஆகாய, கடற்படைகளின் உதவியின்றி சிங்கள இராணுவம் புலிகளுக்கு ஈடுகொடுக்க முடியாது என்ற அளவிற்கு எமது தேசிய விடுதலை இராணுவம் வளர்ச்சி கண்டிருக்கிறது. இது தான் இன்றைய எதார்த்தமான போர் நிலைமையாகும். எனவே, வான்படையின் அனர்த்தங்கள் சிங்கள இராணுவத்தின் பலவீனத்தையும் இயலாத் தன்மையையுமே எடுத்துக்காட்டுகிறது.

இன்று சிங்கள இராணுவம் தமிழீழத்தில் நகர்ந்துசெல்ல முடியாத அளவிற்கு முகாம்களில் முடங்கிக்கிடக்கிறது. முக்கிய இராணுவ முகாம்கள் அனைத்தும் புலிப்படையின் முற்றுகைக்கு இலக்காகி இருக்கிறது. இந்த முற்றுகைகளை முறியடிக்கும் முயற்சிகளாகவே இன்று பல அரங்குகளில் யுத்தம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இன்னொரு விதத்தில் சொல்லப்போனால் தமிழீழத்தை ஆக்கிரமித்திருக்கும் சிங்கள இராணுவம் புலிகளின் முற்றுகைப் பொறிக்குள் சிக்கித் திணறும் சிறைபட்ட (BESIEGEID) இராணுவமாகவே இங்கிருந்து வருகிறது. யாழ் கோட்டை இராணுவமுகாம் இதற்குஒரு நல்ல உதாரணம். நூறுநாட்களுக்கு மேலான முற்றுகையை தகர்ப்பதற்கு சிங்கள முப்படைகளும் கூட்டாகச் சேர்ந்து நிகழ்த்திவரும் தாக்குதல்களைப் புலிப்படை வீரர்கள் மிகவும் சாதுரியமாக முறியடித்து வந்தார்கள். இரவு பகலாக நிகழும் வான் குண்டுவீச்சு, கடற்படைக் குண்டுவீச்சு, தரைப்படைப் பீரங்கித் தாக்குதல் - இவை எல்லாவற்றிற்கும் ஈடுகொடுத்து இரும்பு போன்ற உறுதியுடன் எமது வீரர்கள் நடாத்தும் போர் முழு உலகத்தையுமே திகைப்பில் ஆழ்த்தியிருக்கிறது. புலிகளின் பாதுகாப்பு அரண்களைத் தகர்க்க முடியாது திணறும் சிங்கள ஆயுதப்படைகள், விரக்தியிலும் ஆத்திரத்திலும் யாழ் நகரைக் குண்டுவீசி அழித்து வருவதைச் சகலரும் அறிவர்.

சிங்கள இராணுவம் முற்றுகையிடப்பட்டு முகாம்களுக்குள் முடங்கிக்கிடப்பதால் தமிழீழத்தின் பெரும் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கிறது. தரைப் பிரதேசத்தில் தனது இறைமையை இழந்துவரும் சிங்கள அரசு தமிழீழ வானில் தனது ஆதிக்கத்தைக் காட்டும் வகையில் கண்மூடித்தனமான குண்டு வீச்சை நடாத்தி வருகிறது. தமிழீழ மக்களின் பொருளாதாரக் கட்டுக்கோப்பை சீர்குலைப்பதால் புலிகள் இயக்கத்தை பலவீனப் படுத்தலாம் என்ற ஒரு தவறான மதிப்பீட்டில் இந்தத் தாக்குதல்நாடத்தப்படுகிறது. இதன் எதிர்விளைவாக சிங்கள அரசு தமிழீழ மக்களை முற்றாக அந்நியப்படுத்தியுள்ளது என்றே சொல்லவேண்டும். இனிமேல், ஒற்றையாட்சியின்கீழ் ஒன்றுபட்டு வாழ முடியாது என்ற உண்மையை சிங்கள அரசின் மிருகத்தனமான போர் நடவடிக்கைகள் எமதுமக்களுக்குநன்கு உணர்த்தியுள்ளன.

இந்த யுத்தத்தை நீண்ட காலத்திற்கு தொடர்ந்து நடாத்த முடியாத வகையில் சிங்கள அரசு பெரியதொரு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி நிற்கிறது. நாளாந்தம் பல கோடி ரூபா யுத்த செலவினங்களாக சிறீலங்காவின் திறைச்சேரியை விழுங்கி வருகிறது. வளைகுடா நெருக்கடியும் நிலைமையைமேலும் மோசமாக்கியிருக்கிறது. முப்படைகளின் முழுப் பலத்தையும் பிரயோகித்து மிகக் குறு

9ஆம் பக்கம் பார்க்க

# யாழ். கோட்டையை எவ்விதம் கைப்பற்றினோம்

**370 வருடங்களுக்கு முன்பிருந்து கடந்த 26-09-1990 வரை எமது தமிழீழ மண்ணில் இருந்து வந்துகொண்டிருந்த ஆக்கிரமிப்பின் சின்னமொன்று - ஆக்கிரமிப்பாளனின் கூடாரமொன்று - எம்மால் வெற்றி கொள்ளப்பட்டு விட்டது.**

**மாறி மாறி ஆக்கிரமிப்பாளர்களின் கொடிகள் பறந்த யாழ் - கோட்டையில் இன்று தமிழன் கொடியாகிய புலிக் கொடி பட்டொளி விசப்பறக்கின்றது.**

**இந்த மாபெரும் வரலாற்று மாற்றத்தை ஏற்படுத்திய 107 நாள் முற்றுகைப் போரின் இறுதிக் கட்டத்தை - ஓரளவிற்கேனும் - தமிழீழ மக்களிற்கு வழங்க முயலுகின்றோம்.**

**யாழ் - கோட்டைக்குள்ளிருந்த ஆக்கிரமிப்பு அசுத்தத்தை அப்புறப்படுத்த புலிகளின் எலும்புகள் எவ்விதம் ஈர்க்குக் குச்சிகளாக இருந்திருக்கின்றன என்பதையும் இக் கட்டுரை காட்டிச் செல்கின்றது.**

மூன்று புறமும் சுரி நிறைந்த அகழிகள். ஒரு புறம் ஆழமற்ற கடல் ஏரி. நான்கு புறமும் பாரிய அகன்ற மதிற் சுவர்கள் வளைந்து - நெளிந்த படி உட்செல்லும் ஒரே ஒரு ஒடுங்கிய பிரதான வாசல்.

மூன்று பக்கங்களில், எதிரி நிலைகளுக்கும், எமது நிலைகளுக்கும் இடையில் இருக்கும், ''முற்ற வெளி'' என அழைக்கப்படும் 50-100 யார் தூரம் உள்ள சிறிய வெளி.

மதிற்சுவரின் மேற்பகுதியிலிருந்து பார்க்கும்போது, மேற்குறித்த வெற்று நிலங்களிலும், அதை அண்டியிருந்த கட்டிடங்களிலும் நடப்பவைகள் அனைத்தையும் சரிவரநோட்டமிட முடியும்.

அதேசமயம் மதிற்சுவரின் மேல் அடுக்கப்பட்டுக் கிடந்த சாக்கு மூடைகளுக்குப் பின்பும் சுவர்களுக்கு உள்ளேயும் என்ன இருக்கின்றது அல்லது என்ன நடைபெறுகின்றது என்பதை வெளியிலிருந்து பார்க்க முடியாது.

யாழ். டச்சுக் கோட்டை தொடர்பான ஒரு மாதிரி உருவம் ஒன்றை மனத்திரையில் விழுத்த இவைகள் போதுமானவை.

1621 ம் ஆண்டு அந்நிய ஆக்கிரமிப்பாளர்களான போர்த்துக்கேயர்களிடம் தமிழரின் இராச்சியம் வீழ்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து எமது மக்களை அடக்கி ஆழ்வதற்காக அமைக்கப்பட்ட கோட்டையானது பின்னர் வந்த ஒல்லாந்துப் படையெடுப்பாளர்களினால் இடித்து அழிக்கப்பட்டு அதே இடத்தில் பலமான ஒரு கோட்டை கட்டப்பட்டது.

அது தான் தற்போதைய கோட்டை ஆகும். இக் கோட்டையானது காலத்திற்குக் காலம் இம் மண்ணை ஆக்கிரமிக்க வந்த ஒவ்வொரு ஆக்கிரமிப்பாளரினதும் கூடாரமாகவே இருந்து வந்திருக்கின்றது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், இந்தியர், சிங்களவர் என்று ஆக்கிரமிப்பாளர்களின் வசம் இருந்த இக் கோட்டையானது கடந்த 26ம் திகதி - திலீபனின் 3வது நினைவு நாளன்று - தமிழர் வசம் ஆகிவிட்டது.

ஆக்கிரமிப்பாளர்களின் கொடிபறந்த கோட்டையில் இன்று தமிழர்களின் கொடி பட்டொளி வீசிப் பறக்கின்றது.

கடந்த ஆனி மாதம் 11 ம் திகதி எமது வரலாற்று எதிரியான சிங்கள அரசுடன் மூண்ட போரைத் தொடர்ந்து யாழ். கோட்டை முகாமானது எமது நேரடி முற்றுகைக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்த முற்றுகைக்கு முதல் விலையாக 16-06-90 அன்று ஜெயராஜ் தனது உயிரைக் கொடுத்தான்.

கோட்டைக்குள் இருந்த சிங்களப்படைகள் வெளியேறவோ, அல்லது உள்ளே எந்த விதமான உதவிகளுமோ சென்றடையாதவாறு முற்றுகை மிகவும் இறுக்கப்பட்டிருந்தது.

## கோட்டையின் அமைப்பு

ஐங்கோண அமைப்பைக் கொண்ட இக் கோட்டை 5 கொத்தளப்பகுதிகளைக் கொண்டிருக்கின்றது. (பீரங்கி போன்ற பெரிய ஆயுதங்களை நிறுத்திவைக்கக் கூடிய கோட்டை மதில் மேலுள்ள விசாலமான பகுதியே கொத்தளம் எனப்படுகின்றது.)

1. பொலிஸ் நிலையப் பக்கமிருந்த பிரதான வாசலோடும் (தென் பகுதி)

2. விளையாட்டரங்கை நோக்கிய படியும் (தென் கிழக்கு பகுதி)

3. வீரசிங்கம் மண்டபப் பகுதியை நோக்கியும். (வடகிழக்கு)

4. தொலைத் தொடர்பு நிலையத்தை நோக்கியும் (வடமேற்கு)

5. பண்ணைச் சந்திக்கு அருகில்மண்டைதீவை நோக்கியும் (தென் மேற்கு) இக் கொத்தளங்கள் அமைந்துள்ளன.

1 வது, 5 வது கொத்தளங்கள் கடலை எதிர் கொள்ளக் கூடிய வகையிலும், மிகுதி மூன்றும் தரையிலிருந்து வரும் எதிர்ப்புகளை சமாளிக்கக் கூடிய வகையிலும் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தன.

இக் கோட்டையைச் சுற்றி மூன்று புறத்திலும் சுரி நிறைந்த 30 அடி அகலமான அகழி உண்டு. மண்டைதீவை நோக்கி இருந்த கடற்கரைப் பக்கமாக பொலிஸ் நிலையத்தையும், பண்ணைச் சந்தியையும் இணைத்த படி ஒரு வீதி செல்கின்றது. கடற்கரை வீதி என அழைக்கப்படும் இது கடற்கரைப் பக்கமிருந்த கோட்டை மதிலுடன் ஒட்டிய படி செல்கின்றது.

இப்பாதையுடன் ஒட்டியிருக்கும் இரண்டுகொத்தளங்களையும், (பண்ணைச்சந்திக்கு அருகில் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக)அடைவதற்கு அகழிகளைத் தாண்டத் தேவையில்லை. ஆனால், ஏனைய மூன்று கொத்தளங்களையும் அடைய அகழியைத்தாண்டி 30 அடி உயரமுடைய மதிலையும் ஏறி வெற்றிகாண வேண்டும்.

பிரதான வாசலுடன் இருக்கும் கொத்தளப் பகுதி பிரதான கோட்டையை விட்டு வேறுபட்டு நிற்கின்றது. மற்றைய நான்கையும் போல் 30 அடி உயரமான மதிலின் மேல் இது அமைந்திருக்கவில்லை.

அந்த 30 அடி உயர மதிலுக்கு வெளியே அகழியையும் தாண்டி இந்த பிரதான வாசல் கொத்தளம் அமைந்துள்ளது. இந்தக் கொத்தளத்தை தாங்கி நிற்கும் மதிற்சுவரின் உயரம் ஆக 10 அடி மாத்திரமே. இந்தக் கொத்தளம் எம்மால் கைப்பற்றப்பட்டாலும்கூட கோட்டைக்குள்ளே செல்வதைத் தடுக்க முடியும். அகழிக்கு மேலால் இடப்பட்ட பாலமும் ஒடுங்கிய வாசல் கொண்ட பாதையும் மீண்டும் எதிரிக்கு சார்பானதாகவே இருக்கும். அப்பாலத்தை தேவை ஏற்படும் போது எதிரி தகர்த்துவிடுவானாக இருந்தால், நாம் 30 அடி அகலமான அகழியைத் தாண்டியே உட்செல்ல முடியும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக பண்ணைச் சந்திக்கு அருகில் மண்டைதீவை நோக்கியிருந்த கொத்தளப் பகுதி கோட்டையைப் பொறுத்தளவில் ஒரு பலவீனமான இராணுவ அம்சத்தைக் கொண்டிருந்தது. 30 அடி உயரமுள்ள மதில் மீதேறி இக்கொத்தளம் வெற்றி கொள்ளப் படுமாக இருந்தால் அகழியைத் தாண்டாமலேயே கோட்டையின் உள்ளே சென்றுவிடமுடியும்.

இதுதவிரக் கோட்டையின் கிழக்குப் பகுதியிலும், மேற்குப் பகுதியிலும், அகழிக்கு வெளியே மறைவானதும், பாதுகாப்பானதுமான காவல் அரண்களும், காவற் கோபுரங்களும் உள்ளன. இவை ''சின்னக் கோட்டை'' என அழைக்கப்படும். அகழியை அடைய முயற்சிப்பவர்களை அங்கிருந்து தாக்கி தடுக்க முடியும்.

## எமது நிலைகள்

கோட்டையைச்சூழ தரைப் பகுதியாக உள்ள மூன்று புறத்திலும் எமது காவல் அரண்கள் இருந்தன.

கோட்டைக்குத் தென் கிழக்கே அமைந்திருந்த பொலிஸ் நிலையக் கட்டிடங்களிலும், விளையாட்டரங்கிலும் அமைக்கப்பட்டிருந்த எமது அரண்களும் கோட்டைக்குத் தென்மேற்குத்திசையில், தொலைத் தொடர்பு நிலையத்துக்கு முன்னால் பண்ணைச் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த எமது காவல் அரண்களும் எதிரியின் இரண்டு கண்களுக்கும் நடுவே நெற்றியில் கூடாரமடித்து இருப்பதைப் போன்றது. இவற்றை கோட்டை முகாமுக்கு மிக நெருக்கமாக சுமார் 50 அல்லது 75 யாரிற்கு உட்பட்ட நிலையில்அமைத்திருந்தோம்.

இவைகள் தவிர தொலைத் தொடர்பு நிலையம், தபால் நிலையம், வீரசிங்கம் மண்டபம், நூல்நிலையக் கட்டிடம் உட்பட கோட்டையைச் சுற்றியிருந்த அனைத்துக் கட்டிடங்களிலும் எல்லா மரங்களுக்குக் கீழும், மதிலோரங்களிலும், கழிவு வாய்க்கால்களிற்குள்ளும் கறையான் புற்றைப்போன்று எமது நிலைகளை அமைத்திருந்தோம்.

கோட்டை முற்றுகையைப் பலப்படுத்துவதற்காக மண்டைதீவிலும் எமது அணி ஒன்று நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

இவைகள் தவிர யாழ். நகரப் பகுதிக்குள்ளும், கரையோரப் பகுதிகளிலும் எமது வீரர்கள் காவல் புரிந்தபடி இருந்தனர்.

இந்த நிலையில் கோட்டைக்குள்ளே உணவுப் பொதிகளைப் போடும் முயற்சியில் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை எதிரியின் இம்முயற்சிகள் அவனுக்கு வெற்றியைக் கொடுக்கவில்லை. பொதிகளில் அரைப்பங்கு மட்டுமே கோட்டைக்குள்ளே வீழ்ந்தன மிகுதி, பண்ணைக் கடலினுள்ளும், அகழிக்குள்ளும், வெளிகளிலும், எமது காவல் அரண்களுக்கு அருகிலும், சில வேளைகளில் எமது காவல் அரண்களைத் தாண்டி மிகத் தொலைவிலும் வீழ்ந்தன.

இதற்கெல்லாம் காரணம் பொதி போடும் சந்தர்ப்பங்களில் விமானம் இருக்கும் உயரம் தான். வானத்தில் குறிப்பிட்ட உயரம் வரை துப்பாக்கி ரவைகளினால் நாங்கள் கூரை அமைத்திருந்தோம் அக்கூரையைத்தாண்டி உள்ளே எந்த விமானமும் வரத் துணியவில்லை.

## எதிரியின் நிலைகள்

12 அடி அகலமும், ஏறக்குறைய 500 யார் நீளமும் கொண்ட கோட்டையின் சுற்றுமதிலில், பாரிய சுடுபடைக் கலங்களை நிறுத்தி வைக்கக்கூடிய 5 கொத்தளங்கள் உள்ளன.

30 அடி உயரம் கொண்ட இந்த மதிற்சுவரில் மேலே மண்மூடைகள் வரிசையாக, இடைவெளிகள் எதுவுமின்றி அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்த மண்மூடைகளுக்கிடையில் நூற்றுக்கணக்கான துப்பாக்கி சுடும் தளங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

இவை தவிர மண்டைதீவுக் கடற்பரப்பில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கடற்படையின் பீரங்கிக் கப்பல்களும், போர் விமானங்களும், உலங்குவானூர்திகளும் கோட்டை முகாமின் காவல் அரண்களாக கடலிலும், வானத்திலும் இருந்து செயற்பட்டு வந்தன.

1985 ம் ஆண்டின் நடுப்பகுதியின் பின் எம்மால் சுற்றிவளைக்கப்பட்ட கோட்டை பிரதான முகாமின் இரு கரங்களாக பொலிஸ் நிலையக் கட்டிடங்களும், தொலைத் தொடர்பு நிலையக் கட்டிடமும் இருந்தன.

1987 ம் ஆண்டு கோட்டை முகாமின் கரங்களாக விளங்கிய பண்ணை பொலிஸ் விடுதிக் கட்டிடங்கள் மீதும், தொலைத் தொடர்பு நிலையத்தின் மீதும் தாக்குதலை நடாத்தி கோட்டை முகாமின் உயிர்வாழ்வுக்கு கேள்விக்குறி ஒன்றைப் போட்டு வைத்தோம்.

அதன் பின்னர் இந்த 107 நாள் முற்றுகையின் போது இக் கோட்டையைக் கைப்பற்றுவதற்கு பெரிய தாக்குதல் முயற்சிகள் இரண்டினை மேற்கொண்டோம்.

## முதலாவது முயற்சி

18. 6. 90

அன்று நள்ளிரவு 12. 00 மணிக்கு யாழ். நகரை உலுக்கிக் கொண்டு ஒரு இடியோசை கேட்டது அதைத் தொடர்ந்து மழையென புலி வீரர்கள் கோட்டையைக் கைப்பற்ற விரைந்தனர்.

மண் மூடைகள் நிரப்பப்பட்ட வாகனங்களின் துணையுடன் கோட்டை மதிலை வெற்றி கொள்ள முனைந்தோம். இம்முயற்சியில்

1. கப்டன் அந்தோனி - அ சத்தியசீலன் - மன்னார்.
2. கப்டன் சேரன் - க. சேனாதிராசா முல்லைத்தீவு
3. லெப் பூபதி - கு. குமாரசங்கர் - திருகோணமலை
4. லெப் வக்கீல் செ. உருத்திரதாஸ் யாழ்.
5. சுருளி- நந்தபாலன் யாழ்.

எமது போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.


## இரண்டாவது தாக்குதல் முயற்சிக்கான தயாரிப்பு

தாக்குதலுக்கான திட்டம் தீட்டப்பட்டவுடனேயே கோட்டையின் பலத்தையும் பலவீனத்தையும் முதலில் தரம் பிரித்தோம்.

அகழிகளுடன் கூடிய மூன்று புறத்தையும் கோட்டையின் பலமாகவும், மண்டைதீவை நோக்கி இருந்த கோட்டையின் கடற்கரை வீதிப்பக்கத்தை அதன் பலவீனமாகவும் எடுத்துக் கொண்டோம்.

மறு பக்கம் பார்க்க

# கோட்டையை முற்றுகைக்குள் வைத்திருந்த எமது காவலரண்கள்




1. பண்ணைச் சந்தியில் 2. தொலைத்தொடர்பு நிலையப் பகுதியில் 3. கொட்டடி இடுகாட்டில் 4. பெரிய தபாற்கந்தோரில் 5. வீரசிங்கம் மண்டபத்தில் 6. திறந்தவெளி அரங்கில் 7. பொது நூல் நிலையத்தில் 8. விளையாட்டரங்கில் 9. பொலிஸ் நிலையத்தில்.

## கோட்டையின் பிரதான பகுதிகள்

**அ. முற்றவெளி ஆ. கோட்டை அகழி இ. அகழி வெளிப்புறச்சாய்சுவர் ஈ. கோட்டையின் கொத்தளங்களும் உட் சுவரும் உ. கோட்டையின் பிரதானவாயில் ஊ. ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் புறமுதுகிட்டு ஓடி வெளியேறிய பாதை (கோட்டை பெண்கள் சிறைச்சாலைக்கு அருகிலிருந்த முன்னைய வாயில். இது முன்னர் கழிவுகள் அகற்றப் பயன்பட்டது. பின் கதவு அகற்றப்பட்டு கல்லால் அடைக்கப்பட்டிருந்தது. அதனை அகற்றி அதனூடேதான் ஸ்ரீ லங்கா இராணுவம் புறமுதுகிட்டோடியது).**

## யாழ்: கோட்டையை....

*(7-ம் பக்கத் தொடர்ச்சி)*

50-100 யாருக்கு இடைப்பட்ட வெளியை நோக்கி கோட்டை மதில்மேல் இருந்தபடி எதிரி விசிறப்போகும் ரவை மழைக்குள் நனையாது கோட்டை மதிலை சென்றடைவது என்பது யம கண்டத்தூடு செல்வதற்கு ஒப்பானதாகும்.

அச் சிரமத்தை ஓரளவு சமாளிக்க வாகனங்களைப் பயன் படுத்தலாம் என்றும் தீர்மானித்தோம். அவ்வாறு வாகனங்களைப் பயன் படுத்தத் தீர்மானித்த போது கோட்டையின் கொத்தளப் பகுதியிலிருந்த பீரங்கிகள் (Cannon) அதற்கு அச்சுறுத்தலாக இருந்தன. எமது வீரர்களை ஏற்றிச் செல்லும் ஒரு வாகனம் பீரங்கி வேட்டிற்கு இலக்காகுமாக இருந்தால் அது எமக்குப் பலத்த இழப்பைத் தரும் - எனவே, அதற்கு ஏற்றாற் போல் கனரக வாகனங்களை எடுத்து எமது தொழில் நுட்பத்தின் மூலம் கவச வாகனங்களாக உருமாற்றப்பட்டன.

எதற்கெதற்கோ செய்யப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வந்த பாரம் தூக்கிகளும், புல்டோசர்களும் எமது தொழில் நுட்பப் பிரிவைச் சேர்ந்த வீரர்களினால் டாங்கிகளாக (Tank) மாற்றப்பட்டன. கோட்டை மதிலை வெற்றி கொள்ள இவைகளைப் பயன் படுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

வாகனங்களைப் பயன்படுத்துவது என்றவுடன் இன்னுமொரு புதிய சிக்கல் எம் முன்னால் நின்றது. அதாவது கோட்டையைச் சுற்றிய எதிரியினது வான்தாக்குதல்களினாலும், எமது எறிகணைத் தாக்குதலினாலும் பாதிக்கப்பட்டுக் குண்றும், குழியுமாக இருந்த பாதையினூடு இருட்டில் இந்த கனரக வாகனங்களை ஓட்டிச்செல்வது, ஒரு பெரிய பிரச்சனையாக எம்முன் இருந்தது. அதைவெற்றி கொள்ள நிலவு ஒளி மிகுந்த ஒரு நாளில் தாக்குதல் நடாத்தத் திட்டமிடப்பட்டது.

இத் தாக்குதற் திட்டத்தை எமது யாழ். மாவட்டத் தளபதி திரு. பானு தலைமை தாங்கித் தயாரித்தார்.

கோட்டைச் சுற்றாடலின் பலங்கள், பலவீனங்கள், எமது தாக்குதற் தந்திரோபாயங்கள், அதைச் செயற்படுத்தும் யுக்திகள் என்பனவற்றை தாக்குதல் குழுவினருக்குத் தெளிவாக்கினார்.

5. 8. 90 அன்று பின்னிரவு நேரம் தாக்குதலுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. எம்மால் தயாரிக்கப்பட்ட எறிகணைகள் கோட்டைக்குள்ளே சரமாரியாக ஏவப்பட்டன. 30 அடி உயர மதில்களுக்குள் விழுந்து வெடித்த அக் குண்டுகளின் அதிர்வால், கோட்டை கிடுகிடுத்தது. உள்ளே இருந்து அவலக்குரல்கள் எழுந்தன.

சில விநாடிகளின் பின் தொலைத் தொடர்பு நிலையப் பக்கமிருந்து பண்ணைச் சந்திக்கூடாகவும், பொலிஸ் நிலையப் பக்கமிருந்தும், நூல் நிலையப் பக்கமிருந்தும் உறுமியபடியே வந்த பாரிய வாகனச் சத்தங்கள் அக் குரல்களை மௌனமாக்கி விட்டன.

கோட்டை மதிலின் மேலிருந்த துப்பாக்கிகளும், கோட்டை மதிலை நோக்கி இருந்த துப்பாக்கிகளும், பேசிக்கொள்ளத் துவங்கின.

எமது கவச வாகனங்கள் கோட்டை மதிலை அண்மிக்க முன்னரே விமானங்களும் வந்து விட்டன. கொத்தளப் பகுதியிலிருந்து ஏவப்பட்ட பீரங்கிக்குண்டுகளும், விமானத்திலிருந்து வீசப்படும் றொக்கற் குண்டுகளும் எமது வாகனங்களைக் குறிவைத்தன.

கோட்டை எங்கே இருக்கின்றது, கடல் எங்கே இருக்கின்றது. கடற்கரை வீதி எங்கே இருக்கின்றது. என்பதை இனங்கண்டு கொள்ள முடியாத அளவுக்கு ஒரே புகைமண்டலமாகக் கிடக்கின்றது.

பண்ணைச் சந்திப்பக்கமாக மண்டைதீவை நோக்கிஇருந்த கொத்தளத்தின் மீது எதிரியின் துப்பாக்கிகளை அகற்றிவிட்டு எமது துப்பாக்கிகளை ஏற்றுவதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தோம்.

ஒரு கணத்துக்கு முன்னால் வீசப்பட்ட விமானக் குண்டு ஒன்றினால், பண்ணைச் சந்திக்கு அருகே வீதியின் நடுவே ஏற்பட்ட பாரியகுழி ஒன்றினுள் முன்னே சென்ற சிறிய பாரம் தூக்கி ஒன்று வீழ்ந்து விட்டது. பின்னால், வந்த இராட்சத பாரம் தூக்கிஅதை இடித்துத் தள்ளியபடி முன்னேறியது.

பண்ணைச் சந்திப் பக்கமிருந்த கொத்தளத்தை வெற்றிகரமாகத் தாண்டி, கோட்டையின் பின் புறத்திலிருந்த அவசரகாலத்தில் பயன்படுத்தும் சிறிய வாசலை நோக்கி முன்னேறியது. (அவ் வாசல் சீமெந்துச் சுவர் போட்டு மூடப்பட்டுக் கிடந்தது.)

அவ் இரகசிய வாசலுக்குப் போகுமுன்னர், வீதிஓரத்தில் இருந்த, கோட்டைமீதான முதலாவது தாக்குதலில் நடாத்தப்பட்ட குண்டுவெடிப்பினால் ஏற்பட்ட மிகப்பெரிய கிடங்கு ஒன்றினுள் எதிர்பாராத விதமாக பாரம் தூக்கி வீழ்ந்து விட்டது.

பாரம் தூக்கிகளை மதிலோரம் கொண்டு சென்று, அதன் உதவியுடன் மதிலின் மேல் இருந்த எதிரிகளின் தலைக்கு மேலே எமது வீரர்களை இறக்கி அவர்களுக்குச் சமாதி கட்ட எடுத்த முயற்சி இரண்டு பாரம் தூக்கிகளின் இழப்பினால் நிறைவேற்ற முடியாது போய்விட்டது.

யாழ் கோட்டையின் ஒரே ஒரு பலவீனமான பண்ணைச் சந்திப் பக்கமிருந்த கொத்தளத்தைக் கைப்பற்றுவது எமது பிரதான நோக்கமாக இருந்தது. பாரம் தூக்கிமூலம் மேலே சென்று மதிலேற இருந்த புலிவீரர்களின் எண்ணம் கைகூடாமல் போக சுய முயற்சியுடன் மதிலேறத் தீர்மானித்தார்கள். பெரியஏணிஒன்றைக் கொண்டு வந்து, மதிலோரம் வைத்து அதன் உதவியுடன் ஏறத் தொடங்கினார்கள்.

அதேசமயம் பலத்தஎதிர்ப்பை கொத்தளப்பகுதியிலிருந்து எமது வீரர்கள் சந்தித்துக் கொண்டிருந்தார்கள். புளிய மரம் உலுப்பப்படும் பொழுது பொல பொலவென புளியம் பழம் விழுவதைப் போன்று, கைக்குண்டுகள் மேலிருந்து வீசப்பட்டன. அவை விழுந்து வெடித்தபோது எமது வீரர்கள் காயமடைந்ததுடன் ஏணியும் உடைந்துவிட்டது.

புதிய ஏணி ஒன்றிற்காக காத்திருக்க முடியாத நிலையில், அவசரகால தேவைக்கென கொண்டு செல்லப்பட்ட கயிறின் மூலம் உடைந்த ஏணி கட்டப்பட்டு மதிலின் மீது சாத்தப்பட்டது.

ஏணியின் மீது ஏறிய தோழர்களுக்கு மீண்டும் ஒருஅதிர்ச்சி. ஏணியின் உடைவைப்பொருத்தியபின், ஏணியின் உயரம் சில அடிகள் குறைந்து விட்டது. உடைவு பொருத்தப்பட்ட இடம் வளைந்ததினால் மேலும் ஏணியின் உயரம் குறைந்தே இருந்தது. இதனால் மதிலின் மேற்பகுதியை அடையமுடியவில்லை.

மீண்டும் ஏணி திருத்தப்படுகின்றது. மதிலடிவாரத்தில் ஒரு திருத்த வேலை நடைபெறுகின்றது. இதற்கு உதவுவதற்காக மதிலேறவந்த குழு, அருகிலுள்ள அகழிகளுக்கருகிலும், கடற்கரையிலும் நிலை எடுத்து மதில் மேலுள்ள எதிரிகளுடன் போரிட்டுக் கொண்டிருந்தார்கள்.

மதிலின் மேற்பகுதிக்கு சில அடிகள் கீழே சுவரைப்பிய்த்தபடி ஒரு அரச மரம் முளைத்திருந்தது. குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட வெளிச்சங்களில் எமது வீரர்கள் அதைக் கண்டனர்.

திருத்தப்பட்ட ஏணி அரச மரக்கிளையுடன் சாத்தப்பட்டு அதில் ஏறி அசையாதவாறு கிளையுடன் கட்டப்படுகின்றது. இப்பொழுது அதில் ஏறி கொத்தளத்தை வெற்றி கொள்ளும் முயற்சி நடைபெறுகின்றது. எமது தோழர்கள் 5 பேர் ஏணியின் உதவியுடன் கொத்தளத்தை அடைந்து விட்டனர். கொத்தளத்தில் அமைக்கப்பட்டிருந்த பதுங்கு குழிக்குள் இருந்து எதிரிகளை ஒழிக்கும் முயற்சி நடைபெற்றது.

ஒரு இயந்திரத் துப்பாக்கியை இயக்கிய படி கொத்தளத்துக்கு அருகில் இருந்து போராடிய டயகக்கு அருகில் செல் குண்டொன்று வீழ்கின்றது. இவனுக்கு அருகில் இருந்த சீலன் இருகால்களையும் இழக்கிறான். அந்த நிலையிலும் டயசினது இயந்திரத் துப்பாக்கியையும் கையில் எடுத்தபடி மெது மெதுவாக ஊர்ந்து எமது தோழர்களை நோக்கிச் செல்கிறான். சில யார் தூரம் சென்றதும் மேலும் செல்ல இயலாமல் மடிகிறான்.

கொத்தளப் பகுதியில் நிற்பவர்களுக்கு உதவவென சென்ற கண்ணாடி, ஜொனி, புரட்சி மாறன், நெல்சன், அனிபா, ஜேம்ஸ், வசிட்டன், சந்துரு, பிலிப்ஸ், நிசாந்தன் ஆகியோரும் மதிலடிவாரத்திலேயே வீழ்கின்றனர்.

கொத்தளத்தின் மேற்பகுதியில் நடந்த சண்டையிலேயே லோசனும், அனிபாவும் இறக்கின்றார்கள். எம்மால் கைப்பற்றப்பட்ட கொத்தளப்பகுதியை பலப்படுத்தி அங்கிருந்து முன்னேறுவதற்குத் தேவையான ஆட்பலம் மேலே இருக்கவில்லை. அடிவாரத்தில் நீண்ட நேரம் நடந்த சண்டையில் குழுத் தலைவர்கள் உட்படப் பலர் காயமடைந்துவிட்டனர். சிலர் இறந்து விட்டனர். எனவே கைப்பற்றப்பட்ட கொத்தளத்தை ஸ்திரப்படுத்த முடியவில்லை.

### பெண் போராளிகளின் மனோதிடம்

கோட்டையின் பிரதான வாசல் பகுதியை ஆண்போராளிகளும், பெண்போராளிகளும் சேர்ந்து, ஒரு உச்சத் தாக்குதலைத் தொடுத்து கைப்பற்றுவதற்கான திட்டம் தீட்டப்பட்டது. ஆனால், கோட்டை வாசலைக் கைப்பற்றும் பொறுப்பை மகளிர் படை அணியிடமே தரவேண்டும் என பெண்கள் தரப்பினர் வற்புறுத்திக் கேட்டனர்.

அவர்களது வேண்டுகோள் ஏற்கப்பட்டு வாசல் புறத்தை நேரடியாகச் சென்று கைப்பற்றும் பொறுப்பு பெண் புலிகளின் அணியிடம் வழங்கப்பட்டிருந்தது. அதே சமயம் வாசலுடன் இருந்த தென் பகுதிக் கொத்தளத்தைக் கைப்பற்ற ஆண்கள் அணி சென்றது. இந்தக் கொத்தளமும், வாசல்புறமும் பொலிஸ் நிலையக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்த எமது காவல் அரணிலிருந்து சுமார் 40 யார் தூரத்திலேயே இருக்கின்றன. நாம் கோட்டை வாசலைக் கைப்பற்ற முயற்சிப்போம் என்பது எதிரிக்கு நன்கு தெரியும் எனவே, கோட்டை வாசலை மிகவும் பலப்படுத்தி இருந்தான். தாக்குதலின்போது எமக்குப் பெரிதும் முட்டுக்கட்டையாக இருந்த விமானங்களும் கோட்டை வாசல் பகுதியை அண்டிய இடங்களையே தமது பிரதான இலக்காகக் கொண்டிருந்தன. கோட்டை வாசல் பகுதியிலிருந்தும், அதை அண்டிய கொத்தளம் மற்றும் மதில் மேலிருந்தும் சாரமாரியான கைக்குண்டுத் தாக்குதல்களை எதிரி நடாத்திக் கொண்டிருந்தான்.

கோட்டை வாசலை நோக்கிய பாதையானது தண்ணீர் ஓடும் ஒரு வாய்க்காலைப் போன்றது. வாய்க்காலின் புருவப் பகுதியைக் காப்பரணாகக் கொண்டு வாசலில் உள்ள எதிரி நிலைகளைக் கைப்பற்ற சங்கீதாவின் தலைமையிலான பெண்கள் அணி சாதுரியமாகவும், துணிச்சலுடனும் முன்னேறியது. எதிரி நிலையிலிருந்து 5 - 6 யாருக்குச் சென்று விட்டார்கள். (அங்கிருந்தபடி சமாரியான தாக்குதலைத் தொடுத்துக் கொண்டு எதிரியின் அரணுக்குள்ளே பாய்ந்து சென்று கையெறிகுண்டை உள்ளே வீசி அரணுக்குள்ளேயே எதிரிக்குச் சமாதிகட்ட முனைந்தார்கள்). பெண்கள் அணிக்குதவியாக மறுபுறத்தில் ஆண்கள் அணியானது கோட்டை

10ஆம் பக்கம் பார்க்க

6ம் பக்கத் தொடர்ச்சி

இய காலத்தில் புலிகளைஅழித்துவிடலாம் என சிங்கள அரசு போட்ட திட்டம் சிதறடிக்கப்பட்டுவிட்டது. புலிகளின் பலத்தையும் உறுதிப்பாட்டையும் தவறாக மதிப்பிட்டதால் இன்று சிங்கள அரசு செய்வதறியாது திணறுகிறது. இது மாத்திரமன்றி சிங்கள இராணுவத்தின் உறுதிப்பாடும் (Morle) படிப்படியாக தளர்ந்து வருகிறது. கடந்த நூறு நாள் யுத்தத்தில்காவற்துறையினர் உட்பட 2000க்கும் அதிகமான ஆயுதப்படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 3000 பேர்வரை காயமடைந்துள்ளனர் நூற்றுக்கணக்கானோர் கண்ணிவெடியில் காலை இழந்து அங்கவீனர் ஆகியுள்ளனர். முன்பு என்றுமில்லாத அளவு சிங்கள இராணுவம் உயிர்ச்சேதத்தை சந்தித்து வருகிறது. புலிகளின் இராணுவ ரீதியான வளர்ச்சியும் சிங்கள இராணுவத்திற்கு சிம்ம சொற்பனத்தை கொடுத்திருக்கிறது. நேருக்கு நேர் சிங்கள முப்படைகளையும் எதிர்கொண்டு தாக்கும் ஆயுத பலம், ஆட்பலம், ஆன்ம பலம் கொண்ட வீர விடுதலை இராணுவமாக புலிகள் இயக்கம் வளர்ச்சி கண்டிருப்பது சிங்கள அரசை திகைப்பில்ஆழ்த்தியிருக்கிறது. வான்படை, கடற்படை, பீரங்கிப் படைகள் ஈடுபடுத்தப்படும் மரபுவழி யுத்தத்தை எதிர்கொண்டு போராடும் அளவிற்கு விடுதலைப் புலிகளின் தேசிய விடுதலை இராணுவம் வளர்ந்திருப்பது எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பம் என்றே சொல்ல வேண்டும்.

அடுத்த கட்டமாக எமது தலைவர் பிரபாகரன் கருதுவதுபோல, எமது தேசிய இராணுவம் மேலும் பலப்படுத்தப்படவேண்டும்.மேலும் நவீனமயப்படுத்தவேண்டும். இதற்காக நாம் அந்நிய நாடுகளின் உதவியை எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை. நாம் சுயாதீனமாக முயற்சித்து இந்த சாதனையை சாதிக்க வேண்டும் எமது மக்களின் முழுமையான ஆதரவு எமக்கு இருக்கும்வரை நாம் எதையும் சாதித்துவிடலாம் என்ற அசையாத நம்பிக்கை எமக்குண்டு.

பிரிந்து செல்லும் தமிழீழ தேசம் சுயபூர்த்தியுடைய பொருளாதார வாழ்வு நிலையை அடையக்கூடாது என்ற நோக்கில் எதிரியின் குண்டுவீச்சு விமானங்கள் இன்று எமது பொருளாதார இலக்குகளை தாக்கி அழிக்க முயற்சித்து வருகின்றன. தமிழீழ மக்களை பட்டினியின் விளிம்புக்குத் தள்ளி அவர்களது மனவுறுதியை தகர்க்க வேண்டும் என்பதும் இந்த ஆகாயத் தாக்குதலின் நோக்கம். ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் இத்தகைய நிகழ்வுகள் சர்வ சாதாரணம். வீர விடுதலை வேண்டி நிற்கும் ஒரு மக்கள் சமுதாயத்தை பட்டினிபோட்டு, பயமுறுத்தி அடிபணிய வைக்க முடியாது.

போராடி இரத்தம் சிந்காமல், பேரழிவுகளை சந்திக்காமல் எந்தவொரு விடுதலைப்போராட்டமும் வெற்றி பெற்றதாக வரலாறு இல்லை கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக உயிர்ச் சேதமும், பொருட் சேதமுமாக நாம் பேரழிவுகளை சந்தித்து வந்திருக்கிறோம். ஆகாயத்திலிருந்து விழும் குண்டுகள் எமது வீடுகளை அழிக்கலாம் எமது கட்டிடங்களைத் தகர்க்கலாம். ஆனால், எமது மனவுறுதி தளராதவரை எதிரியின் நோக்கம் வெற்றிபெறப்போவதில்லை.

இன்று தமிழீழ மக்களுக்கென ஒரு தேசிய விடுதலை இராணுவம் உருவாகி, களத்தில் நின்று மகத்தான சாதனைகளைப் புரிந்துவருகிறது. இந்த விடுதலை இராணுவத்தை மேலும் பலப்படுத்தி, நவீனமயமாக்கி விடுதலைப் போராட்டத்தை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்ல மக்களின் பங்களிப்பு அத்தியாவசியமானது. விடுதலைப் புலிகள் இயக்கம் தனித்து நின்று போராடி விடுதலையை பெற்றுத்தரும் என எமது மக்கள்வெறும் பார்வையாளர்களாக இருந்துவிடமுடியாது. இன்றைய யுத்தம் புலிகளுக்கும் சிங்கள இராணுவத்திற்கும் மத்தியிலான போர் அல்ல. இது தமிழீழ, சிறீலங்கா தேசங்கள் மத்தியில் நிகழும் இறுதியான போர். எமது மக்களின் எதிர்கால அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கப்போகும் ஜீவ மரணப் போர். இந்தப் போரில் தமிழீழக் குடிமக்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் பங்களிப்பது தேசியக் கடமை மட்டுமன்றி வரலாற்றின் கட்டாயமும் ஆகும். பிரபல ஆபிரிக்க சுதந்திர வீரரான சமோரா மாசேலின் அனுபவக்கூற்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

"ஒரு விடுதலை இயக்கம் தனித்து நின்று போராடி மக்களை விடுதலை செய்வது என்பது சாத்தியமான காரியமல்ல. போராட்ட அனுபவம் மூலம் நாம் கண்ட எதார்த்தமான உண்மை இது. மக்களும் தனித்து நின்று போராடி சுதந்திரத்தை பெற்றுவிட முடியாது. ஒரு விடுதலை இயக்கத்துடன் மக்கள் அணிசேர்ந்து போராட்டத்திற்கு முழுமையான பங்களிப்புச் செய்வதன் மூலமே விடுதலை சாத்தியமாகிறது."

---

இழப்புக்களும் அழிவுகளும் ஒரு விடுதலைப் போராட்டத்தில் சர்வசாதாரண நிகழ்வுகள். நாம் எத்தனையோ இழப்புக்களையும், அழிவுகளையும். சந்தித்துள்ளோம். சந்தித்தும் வருகின்றோம். ஆனால் இந்த இழப்புகளும், அழிவுகளும் எமது ஆன்ம உறுதிக்கு உரமாக அமைந்து விட்டால் உலகத்தில் எந்தவொரு சக்தியாலும் எம்மை அடக்கிவிட முடியாது.

*தலைவர் வே. பிரபாகரன்*

---

# தாயை நேசிக்க மீசை முளைக்கத் தேவையில்லை...

பாட்டன் பணக்காரன்தான்
அப்பன் அறிவாளிதான்.
ஆயினும்
சிங்களவனின் அடிமைதானே.

கொழும்பில்
கொடிகட்டியவர்கள்தான்
பொருள் குவித்தவர்கள்தான்.
இருப்பினும்
ஒருநாள் அகதிதானே.

மேல்நாட்டுப் படிப்பும்
வெளிநாட்டு வாழ்வும்
விரும்பினால் பெறலாம்தான்
அப்பொழுதும்
நாடோடியன்றோ?

அடிமையாய் வாழ்வதும்
ஆசையில் திரிவதும்
அஞ்சிச் சாவதும்
அவர்களோடு போகட்டும்.

நாம்
பிறந்தது போலவே
மனிதனாய் வாழ்ந்து
மனிதனாய்ச் சாவோம்.

எத்தனை பெரிய பாடம்
எழிமையாகப் படித்தது
இளைய பரம்பரை.

தம்பி
புத்தகப்பை தொங்கவேண்டிய
உன் தோழில்
துவக்குக் கட்டையைத்
தொங்கவிட்டது வரலாறு.

விளையாட
தும்பி பிடித்த கை
இன்று
விடுதலைக்குத் தும்பி சுடுவது
வரலாற்றின் நிர்ப்பந்தம்

பால்வடியும் முகத்தில்
படைத்தனம் குடியேறியது
உன் நெஞ்சில் விரவிய
விடுதலை வேட்கையின்
வெளிப்பாடுதானே.

"இந்த வயதில்
நாட்டுப் பற்றா"!
வியப்புக் குறிகளுக்குச் சொல்
தாயை நேசிக்க
மீசை முளைக்கத் தேவையில்லை

உன் அன்னை
பாலைப் புட்டியில் அடைக்காமல்
தன் சிவப்பு இரத்தத்தை
வெண்மையாக்கி ஊட்டினாள்

இன்று நீ.
தாய் மண் மீட்க
சாவைக் குப்பியில் அடைத்துச்
சரித்திரம் படைக்கின்றாய்.

அடக்கு முறையாளர்களால்
முதிர்ந்தது
உன் அறிவு மட்டுமல்ல
பிஞ்சுக் கைகளும்தான்.

ஓங்கிய
உன் கைமுட்டிகளால்
உடைபடுவது
பூட்டிய விலங்குகள் மட்டுமல்ல
இனவெறிக் கோட்டையும்தான்.

உன் நெஞ்சக் கனலை
ஆதிக்கச் சருகின் மேல்
வாரி வீசு
துணிந்தால்
எதிரியின் எலும்பெல்லாம் தூசு.

மறைகின்ற சூரியன்
இரத்தம் சிந்துவதால்தான்
மறுநாளும் வாழ்கின்றது.
விடுதலைப் போராளியைப்போல.

## யாழ். கோட்டையை....

8ஆம் பக்கத் தொடர்

வாசலின் அருகிலும், மேலேயும் இருந்த எதிரியின் அரண்களைத் தாக்கி அவர்களைத் திசைதிருப்பிக் கொண்டிருந்தார்கள்.

காற்றையே காப்பரணாக்கி கோட்டை வாசலைக்கைப் பற்ற முனைந்த லெப்.சங்கீதா, மாதங்கி, அநுரா, மாதுரி, ஆகியோர் கோட்டை வாசலிலேயே இரத்துடன் வீழ்ந்து போனார்கள்.

அதே சமயம் வாசலுக்கு அருகிலிருந்த கொத்தளத்தைக் கைப்பற்றச் சென்ற ஆண்போராளிகளில் பலர் காயமடைந்தும், சிலர் இறந்தும் விட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் டாங்கி போன்று வடிவமைக்கப்பட்ட புல்டோசர் ஒன்று பொலிஸ் நிலையப் பின் பகுதியிலிருந்து கடற்கரை வீதி வழியாக தென்பகுதிக் கொத்தளத்தை நோக்கி செல்லத் துவங்கியது.

விமானத்திலிருந்து வீசப்பட்ட வெளிச்சக் குண்டுகளும், மற்றும் விமானத்திலேயே பூட்டப்பட்டுக் கிடந்த சக்தி வாய்ந்த மின் விளக்குகளினதும் ஒளியில் புல்டோசரின் நகர்வை எதிரி கண்டு விட்டான். விமானத்திலிருந்து ஏவப்பட்ட குண்டொன்று புல்டோசரின் முன் பகுதியைத் தாக்கியது. கவசமயப்படுத்தப் பட்டிருந்தபடியால் வாகனம் உடைந்து சிதறவில்லை. ஆனால், சாதாரண தாங்கும் சக்திக்கு அப்பாற்பட்ட அதிர்வின் காரணமாக புல்டோசரின் சாரதி மயக்கமடைந்து விட்டான்.

டோசருக்குள்ளே இருந்த சக தோழர்கள் தண்ணீரைத் தெளித்து சாரதியின் மயக்க நிலையைப் போக்கினர். மீண்டும் டோசர் கொத்தளப் பகுதியை நோக்கி தாக்குதலை நடாத்திக் கொண்டு முன்னேறியது.

இந்தத் தென்புறக் கொத்தளப் பகுதியைக் கைப்பற்ற முனைந்த அணிகள் பலத்த எதிர்ப்பைச் சந்தித்தபடி திரமுடன், உயிரைக்கொடுத்துப் போராடிக் கொண்டிருந்தார்கள். தன்னந்தனியாக ஒரு தோழன் கொத்தளப்பகுதியில் ஏறி அங்கிருந்தபடி எதிரி மீது கைக்குண்டுத் தாக்குதலை நடாத்தினான். இருந்தும் இந்தமுனையில் 13 தோழர்களது இழப்பும் மேலும் பலர் காயமடைந்தும் இருந்தபடியால் கொத்தளத்தில் ஏறித் தாக்குதலை நடாத்துவது இயலாமல் போய்விட்டது.

இக் கொத்தளப் பகுதியைக் கைப்பற்றும் அணிக்கு பொறுப்பாக இருந்த குழுத் தலைவன் வைத்திருந்த துப்பாக்கி குண்டுபட்டு இயங்காது நின்றுவிடுகின்றது. புதிய துப்பாக்கி, ஒன்றைப் பெறுவதற்காகப் பின்னால் இருந்த பொலிஸ் நிலையக் காவல் அரணுக்குச் சென்று புதிய துப்பாக்கி ஒன்றைப் பெற்று வந்து மீண்டும் கொத்தளப் பகுதியில் நின்று போராடினான்.

தென்பகுதிக் கொத்தளத்துடன் இருந்த கோட்டை வாசலை இருபுறத்திலும் நெருங்கி அதைக் கைப்பற்றும் முயற்சியில் பெண்புலிகள் சங்கீதா, மாதங்கி, மாதுரி, அநுரா, மற்றும், கருணாநிதி, சரத்பாபு, விக்ரம், கெனடி, நிசாந்தன், அலீப், சபேசன், மோகன், எட்றிச் ஆகிய பதிமூவர் வீரமரணமடைந்தனர்.

இதே சமயம் தொலைத் தொடர்பு நிலையப் பகுதியிலிருந்து வட-மேற்கு கொத்தளப் பகுதியை கைப்பற்ற முனைகையில் யசோவும் இந்த முனையில் காயமடைந்த வீரர்களை அப்புறப்படுத்திக் கொண்டிருந்த பில்லாவும் வீரமரணத்தைத் தழுவுகின்றனர்.

காயமடைந்து மயக்க நிலையில் உயிருடன் இருந்த பெண் போராளி ஒருவர் காலையில் மயக்கம் நீங்கியும் வெளியேற முடியாத நிலையில் அடுத்த நாள் இரவு - ஏறக்குறைய 15 மணிநேரத்தின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டார்.

இந்த முயற்சியில் 27 தோழர்கள் தமது உயிர்களை அர்ப்பணித்துக் கோட்டையைக் கைப்பற்ற முனைந்தனர்.

இப் பாரிய தாக்குதலின் தாக்கங்களும், வெற்றி கொண்டுவிட திடமுடன் முனைந்த புலிவீரர்களின் மன உறுதியும், போராடும் ஆற்றலும் சிறீலங்கா அரசுக்கு கலக்கத்தை ஊட்டியது. எனவே கோட்டையை மீட்பதற்காக பாரிய பொருட்செலவில் ஒரு படை எடுப்பொன்றை நடாத்தத் தீர்மானித்தது.

4000 ற்கும் மேற்பட்ட படையினரையும், 8 போர் விமானங்களையும், மூன்று அவ்ரோ விமானங்களையும் 6 ஹெலிகொப்டர்களையும், 2 கடற்படைப் பீரங்கிக் கப்பற் பிரிவையும் இதற்கு ஈடுபடுத்தத் தீர்மானித்தது.

ஊர்காவற்துறையிலிருந்து சுமார் 12 மைல் நீளமுள்ள மண்டைதீவுக்கு படையெடுத்து, அங்கிருந்து சென்று கோட்டையைச் சுற்றியுள்ள புலிகளின் நிலைகளை உடைத்து - கைப்பற்றி, அங்கிருந்து வைத்தியசாலை, கச்சேரி உட்பட நகர்ப்புறத்தையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சிங்கள அரசு கனவு கண்டது.

இத் திட்டத்திற்கு ஒப்பரேசன் போட்(Operation fort) எனப் பெயரும் இட்டனர்.


சதுப்பு நிலத்தையும், நீண்ட வெளிகளையும் கொண்ட புவியியல் அமைப்பை உடைய தீவகத்தில் ஒரு அடி கூட எடுத்துவைக்க முடியாத சிங்கள இராணுவத்தினர் வான் படைகளின் உதவியுடன் மண்டைதீவைக் கைப்பற்றினர். மண்டைதீவுச் சண்டையில் 44 போராளிகள் வீரமரணமடைந்தனர்.

மண்டைதீவில் இருந்தபடியே கோட்டையைப் பிடிக்க இராணுவம் திட்டம் தீட்டியது. 300 கிலோ எடை கொண்ட பீப்பாக் குண்டுகளையும் 50 கிலோ கொண்ட விமானக் குண்டுகளையும் வீசி யாழ். நகரப் பகுதிகளில் இருந்த கட்டடங்கள் அனைத்தையுமே அழிக்க முயன்று கொண்டிருந்தது.

இத்துடன் நேபாம் குண்டுகளையும், நச்சுக் கிருமிகளைப் பரப்பும் குண்டுகளையும், இரசாயனக்குண்டுகளையும் வீசியது.

13.9.90 அதிகாலை 5.00 மணியளவில் சீனத்தயாரிப்பான '' வை12 '' ரக விமானமொன்று யாழ். நகரப் பகுதிக்கு மேலாகப் பறந்து 300 கிலோ கொண்ட பீப்பாக் குண்டுகளை வீசத் தொடங்கியது. சிறிது நேரத்தில் நடைபெற இருந்த தனது படை எடுப்பிற்கு இறுதிநேர உதவியாக புலிகளின் நிலை என தான், கருதிய இடங்களில் குண்டுகளை வீசியது.

அத்துடன் கோட்டைக்குத் தெற்கே ஒரு கி.மீ. தூரத்திலுள்ள சிறுத்தீவு என்ற இடத்தில் இரண்டு கடற்படைப் பீரங்கிக் கப்பல்களும் நிறுத்தப்பட்டிருந்தன.




**கோட்டையை மீட்பதற்காக சிங்களப்படைகள் நடாத்திய படையெடுப்பின் பாதைகள்**

சரியாக 5.55 மணிக்கு கோட்டைக்குள்ளிருந்து எமது காவல் அரண்கள் அனைத்தையும் நோக்கி சரமாரியான துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அது ஒரு வழமைக்கு மாறான சம்பவமாகத் தென்பட்டது.

மண்டைதீவுக் கடலுக்குள் இருந்த எமது வீரர்களின் கண்களை கோட்டையின் மீது பதிப்பிப்பதற்காகவே அது செய்யப்பட்டது. என்பதை சில நொடிகளில் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

சிறுத்தீவிலிருந்து சுமார் 20 விசைப்படகுகள் கோட்டையை நோக்கி வருவதை எமது தோழர்கள் அவதானித்து விட்டார்கள். உடனடியாகவே அனைத்துக் காவல் அரண்களுக்கும் செய்தி அனுப்பப்பட்டுவிட்டது எமது துப்பாக்கிகள் படகுகளை நோக்கி முழங்கின. படகுகள் புறப்பட்ட அதேநேரம் சிறுத்தீவுக் கடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 2 பீரங்கிப் படகுகளும் குண்டுகளைப் பொழிந்தன. பொலிஸ் நிலையக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்த எமது காவல் அரணும், பண்ணைச் சந்தி உட்பட தொலைத் தொடர்பு நிலையக் காவல் அரண்களும் எதிரிகளின் பிரதான இலக்குகளாக இருந்தன.

கோட்டைக்குள்ளிருந்தும் எறிகணைத் - தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

விநாடிக்குப் பத்திற்கும் மேற்பட்ட எறிகணைகள் பீரங்கிக் குண்டுகள் எமது காவல் அரண்கள் மீது வீசப்பட்டது. நிமிடத்திற்கு ஆயிரக்கணக்கில் துப்பாக்கி ரவைகள் பொழியப்படுவதைப் போல - மழையென குண்டுகளும் வீசப்பட்டன.

மழைபெய்யும் பொழுது ஒவ்வொரு அங்குல இடைவெளிக்குள்ளும் நீர்த்துளி விழுவதைப் போல எமது காவல் அரண்களுக்கு மேலும், கீழும் முன்னும், பின்னும் அருகருகிலும் குண்டுகள் விழுந்து வெடித்தன.

எமது சில காவல் அரண்கள் சரிந்தன. சில உடைந்தன. எமது தோழர்கள் சிலர் செத்து விழுந்தனர். சிலர் காயமடைந்தபடி முனகிக் கொண்டு கிடந்தனர். ஆனாலும் எஞ்சிய தோழர்களின் துப்பாக்கிகள் கடலைநோக்கி முழங்கியபடி கிடந்தன. வந்த படகுகளில் ஏழு மூழ்கடிக்கப்பட்டது. மற்றவைகள் தொடர்ந்தும் கோட்டையை நோக்கி விரைவாக முன்னேறாதவாறு தடுக்கப்பட்டன. எமது துப்பாக்கிகளிலிருந்து புறப்பட்ட ரவைகளுக்குத் தப்புவதற்காக எஞ்சிய படகுகளில் இருந்தவர்கள் கடலுக்குள் குதித்து கோட்டையை நோக்கி நடந்து செல்ல முற்பட்டனர்.

இவர்களில் பலர் கடலுக்குள்ளேயே குண்டடிபட்டு விழுந்தனர் ஒரு சில படகுகள் மண்டைதீவிற்கே மீண்டும் தப்பியோடின. ஒரு சில படகுகள் காயமடைந்தவர்களுடன் மண்டைதீவிற்குச் சென்றது. ஒரு சில படகுகள் கோட்டையை நோக்கியும் இழுத்துச் செல்லப்பட்டன.

ஆச்சரியமூட்டக்கூடிய விதத்தில் வேகமான திடீர்த்தாக்குதலைச் செய்து, புலிகளை மலைக்க வைத்து அவர்களின் காவல் அரண்களை உடைத்து அவற்றைக் கைப்பற்றி விடலாம் என எதிர்பார்த்தே சிங்கள இராணுவம் தாக்குதலைத் தொடங்கியது.

ஆனால், அவர்களது திட்டத்தின் முதல் கட்டத்தை விழிப்புணர்ச்சியுடனும், நிதானமான எதிர்த்தாக்குதல் மூலமும் கடலுக்குள் வைத்தே முறியடித்தோம். 6 படகுகளை மூழ்கடித்ததினாலும் தொடர்ந்தும் படகு மூலம் வேகமாக கோட்டையை அடையவிடாது தடுத்ததினாலும் அதைச் செய்தோம்.

இதைத் தொடர்ந்து இராணுவம் எமது நிலைகளுக்குள்ளே புக முயற்சி செய்தது. இரண்டு விதமான யுக்திகளை இதற்காக இராணுவத்தினர் கடைப்பிடித்தனர்.

1) பொலிஸ் நிலையக் கட்டிடத்தின் மீது தொடர்ச்சியான எறிகணைப், பீரங்கித் தாக்குதல்களை நடாத்திக் கொண்டு, அதேசமயம்

2) தொலைத் தொடர்பு நிலையம் மற்றும் பண்ணைச் சந்திக் காவலரண்கள்மீது விமானத் தாக்குதலையும், அதற்கு அனுசரணையாக கோட்டையிலிருந்து பீரங்கித் தாக்குதலையும், RPG மூலம் ரொக்கற் தாக்குதலையும் நடாத்தியது.

இதற்கு மத்தியில் கடற்கரையை அண்டியிருந்த, கோட்டை மதிலை அடைந்த இராணுவத்தினர் அங்கிருந்து நிலை எடுத்து, பண்ணைச் சந்தியிலிருந்த எமது காவலரண்களை கைப்பற்ற முயற்சி செய்தனர்.

பண்ணைச்சந்தி காவலரண்களைக் கைப்பற்ற இராணுவம் எடுத்த இந்த முயற்சிகளை மனோ உறுதியை அடித்தளமாகக் கொண்ட தந்திரோபாயங்களைக் கடைப்பிடித்து முறியடித்தோம்.

சதுர வடிவில் தண்டவாளங்கள், மண்மூடைகள், ரயர்கள் கொண்டு ஒரு பலமான காவலரணை பண்ணைச் சந்தியில் அமைத்திருந்தோம். இக்காவலரணையும் தொலைத்தொடர்புநிலையத்தையும் இணைக்கும் வகையில் எலிவளை போன்ற ஒரு தொடர் அகழியை அமைத்திருந்தோம்.

இப்பண்ணைச் சந்தி அரணானது திறந்த வெளியில் எதிரிக்கு சவால் விடுவதைப் போல நிமிர்ந்து நின்றது. இது கோட்டையிலிருந்து சுமார் 60 யார் தொலைவில் இருந்தது.

இக்காவலரணை உடைத்து அதைக் கைப்பற்றுவதன் மூலம் தொலைத் தொடர்பு நிலையத்தையும் புலிகளின் கையில் இருந்து மீட்டுவிடலாம் என்ற நம்பிக்கையில் இராணுவம் செயற்பட்டது.

தனித்திருந்த அக் காவல் அரண் விமானத்தால் தாக்கப்பட்டது. ஆர். பி. ஜி. மூலம் ரொக்கற்தாக்குதல் நடாத்தப்பட்டது. கோட்டை மதிலின் மீதிருந்த பீரங்கிகள் மூலம் தாக்கப்பட்டது. காற்று வீசுவதைப்போல துப்பாக்கிக் குண்டுகள் தாக்கின.

புயலுக்குள் அகப்பட்ட கப்பலைப்போன்று, அவ்வரண் பிய்த்தெறியப்பட்டது. தண்டவாளங்கள் உடைந்தன, ரயர்கள் எரிந்து, மண்மூடைகள் சிதறின. ஆனாலும் அதற்குள் இருந்து புலிகளின் துப்பாக்கிகள் வெடித்துக்கொண்டிருந்தன. எலிவளை போன்ற தொடர்குழிக்கூடாக காயம் அடைந்த போராளிகள் அப்புறப்படுத்தப்பட்டனர். பதிலுக்கு புதிய புலிவீரர்கள் அவ்விடத்துக்குச் சென்று எதிரியுடன் கடுமையான யுத்தத்தை நடாத்திக்கொண்டிருந்தார்கள்.

சிறிது நேரத்தில் அந்தக் காவலரணும் உடைந்துபோய் விட்டது. பின்னர் அதற்கு அருகில் இருந்த இன்னொரு காவலரணிற்குள் சென்று புலிவீரர்கள் போரிட்டுக்கொண்டிருந்தார்கள்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# சிங்களப் பத்திரிகையாளர்களை வரலாறு கண்டிக்கும்.

''ஹிற்லரின் யூதஇன அழிப்பைப் பார்த்துக் கொண்டு மௌனமாக இருக்கும் எந்த ஒரு ஜேர்மானியனும் தன்னை ஒருபோதும் நாகரிகம் உள்ளவன் என்று கூறிக்கொள்ள முடியாது. குறிப்பாக பல்கலைக்கழகப் புத்திஜீவிகள், மற்றும் அறிவாராச்சித்துறைசார்ந்தோர், பத்திரிகையாளர்கள் ஆகிய அனைவரும் இதற்கான முதற் பழியை ஏற்க வேண்டும். இக்கால கட்டத்தில் மௌனமாக வாழ்ந்தவர்கள் என்பதற்காக இவர்கள் எல்லோரும் காலமெல்லாம் வெட்கித் தலைகுனிய வேண்டும்.''

இவ்வாறு விஞ்ஞானி ஐன்ஸ்டீன் இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் குறிப்பிட்டார், இக்கூற்றானது சிங்கள அரசின் தமிழின அழிப்பைப்பார்த்துக் கொண்டிருக்கின்ற சிங்கள புத்திஜீவிகள், பத்திரிகையாளர்கள் என்போருக்கு மிகப்பொருந்தும் என்பதுடன் உலகிலுள்ள செய்திஸ்தாபனங்கள், மனிதாபிமான அமைப்புக்கள் என்பவற்றிற்குக்கூடப் பொருந்தும்.

தமிழீழ மக்கள் மீது சிறிலங்கா அரசு முழு அளவிலான ஆக்கிரமிப்பை மேற்கொண்டுள்ளது. தனது இராணுவத்தை அது மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளது. பாரிய விமானக் குண்டுத் தாக்குதல்களை தமிழீழம் எங்கும் அது பரந்தளவில் மேற்கொள்கின்றது. ஒருபுறம் இராணுவம் கிராமங்களைத் தீவைத்துக் கொழுத்துகின்றதுமறுபுறம் விமானக் குண்டு வீச்சுக்கள் மூலம் கட்டிடங்கள், வீடுகள் என்பன தகர்க்கப்படுகின்றன. மிலேச்சத்தனமான முறையில் கொலை, பாலியல் வன்முறைகளை சிங்கள அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொள்கின்றது. பெருமளவில் பொருளாதாரத் தடை நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.

இத்தனை ஒடுக்கு முறைகளையும் பார்த்துக்கொண்டு இருப்பது மட்டுமன்றி கைதட்டி சபாஷ்! சொல்லும் வகையிற்கூட சிங்கள புத்திஜீவிகளும், பத்திரிகையாளர்களும் நடந்து கொள்கின்றனர். இப்படுகொலைகளைக் கண்டிக்காது, வெளிக்கொணராது பார்த்துக் கொண்டிருக்கும் சர்வதேச செய்திஸ்தாபனங்களும், மற்றும் சர்வதேச நிறுவனங்களும் கூட ஐன்ஸ்டீன் குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கு உட்பட்டவர்கள் தான்.

பத்திரிகையாளர்களுக்கு என்றொரு தர்மம் உண்டு. குறைந்த பட்சம் உள்ளதை உள்ளவாறே சொல்வது, உண்மையில் என்ன நடந்தது என்பதை அப்படியே அப்பட்டமாக வெளிக்கொணர்வது

அரசு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளா திருக்கும் காலகட்டங்களில் சிங்களப் பத்திரிகையாளர்கள் முதலைக்கண்ணீர் வடித்த வண்ணம் தமிழ்ப் பகுதிகளுக்கு விஜயம் செய்வார்கள். அவ்வாறு விஜயம் செய்துவிட்டுக்கூட தமிழ் மக்களைப் பற்றி வியப்பூட்டும், பிரமிப்பை ஏற்படுத்தக்கூடிய செய்திகளைத்தான் சிங்கள மக்களுக்குக் கொடுப்பார்கள். அதிலும் கூட ஒருவகை எதிர்ப்பிரச்சாரமே தொக்கு நிற்கும். அத்தகைய செய்திகளும் தமிழ் மக்களின் பிரச்சினைகளையோ, அவர்கள் படும் அல்லல்களையோ வெளிப்படுத்தாது.

சிங்களப் பத்திரிகையாளர்கள் பிரச்சினை நடக்கும் காலகட்டங்களில் தமிழ்ப்பகுதிகளுக்கு விஜயம் செய்வதில்லை. அரசு கொடுக்கும் செய்திகளை அப்படியே பிரசுரிப்பதுடன் அதிற்கூட ஒருவகை மிகைப் படுத்தல்களையே செய்கிறார்கள். மேலும் அரசின் கொடிய ஒடுக்குமுறைகளை ஊக்குவிக்கும் வகையிலும், சிங்கள மக்களைத் தூண்டிபோதைக்கு உட்படுத்தும் வகையிலும் செய்திகளைப் பிரசுரிக்கின்றார்கள்.

இவர்களைப் போலவே வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும்கூட குறிப்பிட்ட இப்பகுதிகளுக்கு விஜயம் செய்யாது அரசு கூறும் செய்திகளை எழுதுகின்றார்கள் தாம் நேரடியாகக் கண்டு செய்திகளை வெளியிடுவதற்குப் பதிலாக அரசு கூறும் செய்திகளையே கூறுவதன் மூலம் இவர்கள் இரு பெரும் தவறுகளைச் செய்கிறார்கள்.

1. அரசு தனக்குச் சார்பான முறையிலேயே செய்திகளை வெளியிடுவது என்ற வகையில் அரசின் அறிக்கைகளை அப்படியே வெளியிடுவதன் மூலம் அரச செய்திகளைப் பிரச்சாரம் செய்பவர்கள் ஆகின்றார்கள்.

2. இப்பிரச்சாரத்தின் மூலம் தமிழ் மக்களின் போராட்டத்தைப் ''பயங்கரவாதம்'' எனக் காட்டும் அரசின் எண்ணத்தை அப்படியே உலக அரங்கில் நிறைவேற்றுகிறார்கள்.

ஒரு பத்திரிகையாளன் என்போன் நடந்ததை நடந்தவாறே சொல்பவன் மட்டுமன்றி சமூக நீதிக்காக குரல் கொடுப்பவனாகவும், வெகுஜன அபிப்பிராயத்தை ஏற்படுத்தக் கூடியவனாகவும் தொழிற்பட வேண்டும். சமூக நீதிக்காக குரல் கொடுப்பது, வெகுஜன அபிப்பிராயத்தை ஏற்படுத்த முயல்வது என்பதில் புத்திஜீவிகளுக்கும், மனிதநேய நிறுவனங்களுக்கும் பெரும் பங்குண்டு. இவர்கள் பிழையென காண்பதுக்கு எதிராக குரல் கொடுக்கத் தவறும்போது அக்குற்றத்தின் இடக்கரமாகி விடுகின்றனர். ஆனால் அக்குற்றத்தை நியாயப்படுத்தும் போது அவர்கள் குற்றத்தின் வலக்கரமாகி விடுகின்றனர். இந்த வகையில் சிங்கள அரசின் இன அழிப்பிற்கு இடக்கரமாகவோ அன்றி வலக்கரமாகவோ கருத்து ரீதியில் துணைபோகும் இத்தகையவர்கள் காலத்தால் அழியாத அநாகரிகத்தை தம்முகத்திற் தாமே பூசிக்கொண்டவர்களாவர்.

இவ்விடத்தில் சாத்ரே(Satre) என்பவரது முன்னுதாரணத்தை தென்னிலங்கை வாழ் புத்திஜீவிகளுக்கு ஞாபகப்படுத்துவது அவசியமாகும். வியட்னாமிய மக்களுக்கு எதிரான அமெரிக்க அரசின் இராணுவ ஒடுக்கு முறைகள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பெரிதும் நியாயப் படுத்தப்பட்ட பிரச்சாரங்களே செய்யப்பட்டுவந்தது. ஆனால் தத்துவ ஞானி சாத்ரே அமெரிக்க ஒடுக்கு முறைக்கு எதிராக ஐரோப்பாவிற் குரல் எழுப்பினார். இவரது குரல் மனச்சாட்சியுள்ள ஐரோப்பிய சிந்தனையாளர்களை விழிப்புறச் செய்தது. பின்பு படிப்படியாக வெகுஜன அபிப்பிராயம் ஐரோப்பா, அமெரிக்காவில் சுவாலைவிடத்தொடங்கியது.

கண்ணுக்கு எட்டாத தூரத்தில், வியட்னாமில் நிகழ்ந்த அமெரிக்க ஒடுக்குமுறைக்கெதிராக குரல் எழுப்பிய சிங்கள புத்திஜீவிகளும், பத்திரிகையாளர்களும் தமது சிங்கள அரசினால் தமிழ் மக்கள் கொடூரமாக ஒடுக்கப்படும் போது அதனைப் பார்த்து கைதட்டி சபாஷ்! சொல்வது எத்தனை விந்தையாக இருக்கின்றது! ☆

# அரச அகதி முகாம்கள் தமிழர்களை அழிக்கும்-புதிய திட்டம்

★ தமிழ் மக்களை அவர்களது வாழ்விடங்களிலிருந்து அப்புறப்படுத்தி குறிப்பிட்ட சில இடங்களில் சிறைவைக்கும் நோக்குடன் சிங்கள அரசு ஒரு திட்டத்தைத் தீட்டியுள்ளது.

★ அந்தச் சிறைச்சாலைகளை ''அகதி முகாம்கள்' என்று அழைக்க சிங்கள அரசு முற்படுகின்றது.

★ இத்தகைய முகாம்கள் அமைக்கும் முயற்சியானது அப்பட்டமான இனப்படுகொலையே என்பதை இக்கட்டுரை காட்டுகின்றது.

★ தமிழ்த்தேசிய இனத்தைக் கருவறுக்கும் இத்தகைய முயற்சிகளுக்கு இந்திய அரசும் உதவ ஒப்புக்கொண்டிருப்பது தமிழீழ மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

★ இதுதொடர்பான இந்திய அரசின் தவறான, மனிதாபிமானம் அற்ற கண்ணோட்டத்தை இந்திய மக்களுக்கும் புரிய வைக்கக்கூடிய வகையில் இக்கட்டுரை அமைந்திருக்கின்றது.

03. 09 1990 அன்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நாகேந்திரநாத் ஜா,சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்து ஈழத்தமிழர் விவகாரம் குறித்துக் கருத்துக் கலந்தார்.

மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் மூன்று அகதி முகாம்கள் அமைப்பதாகவும், அதற்கு இந்திய அரசு உதவியும், ஒத்தாசையும் புரியுமென்றும் இரு பகுதியினருக்குமிடையில் உடன்பாடு காணப்பட்டுள்ளது.

தமிழ் மக்களை அவர்களின் வாழ்விடங்களிருந்து பிரித்து திட்டமிட்டு அகதிகளாக்குவது மிகவும் வெறுக்கத்தக்க ஓர் ஒடுக்குமுறை நடவடிக்கையாகும்.

அகதிகளாகுவது வேறு. திட்டமிட்டு அகதிகளாக்கப் படுவது வேறு.

அகதிகளாக்கப்படுவது என்பது திட்டமிடப்பட்ட ஓர் ஒடுக்கு முறையாகும். இது பல பரிமாணங்களை கொண்டுள்ளது. அதாவது அகதிகளாக்கப்படுவதானது ஓர் ஒடுக்கு முறை என்பதுடன் தேசிய இனத் தனித்துவத்தை அழிப்பதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்துவதும், இலகுபடுத்துவதுமான ஓர் நடவடிக்கையும் ஆகும். மக்களை போராளிகளிடமிருந்து பிரித்து. போராளிகளை அழிப்பதன்மூலம் போராட்டத்தின் கருவை அழிப்பதற்கான நடவடிக்கையாகும். போராளிகளை அழிப்பதன் மூலம் போராட்டத்தை அழிப்பது. போராட்டத்தை அழிப்பதன் மூலம் தமிழ்த் தேசியத் தனித்துவத்தையும், பின்பு மக்களையும் அழிப்பது. திட்டமிட்ட அகதிமுகாம் அமைப்பதென்பது இன அழிப்பிற்கான அனுமதியையும், சர்வதேச ரீதியான அங்கீகாரத்தையும் பெறுவதென்பதாகும். இதற்கு இந்திய அரசு அனுமதியும், அங்கீகாரமும் அழித்துள்ளது மட்டுமன்றி, உதவியும் செய்வதாக ஒப்புக்கொண்டுள்ளது.

## (I) திட்டமிட்ட அகதி முகாம் அமைத்தல் என்பது வெறுக்கத் தக்க ஓர் ஒடுக்கு முறையாகும்.

1949ம் ஆண்டு பாலஸ்தினத்தின் ''டான்ஜிர்'' பிரதேசத்தினுள் புகுந்த யூத கொலைஞர்கள் அம் மக்களை அகதிகளாக அரபு நாடுகளுக்குள் விரட்டினர். யூதர்களின் நோக்கம் பாலஸ்தினர்களை அவர்களது வாழ்விடங்களிலிருந்து பிரித்து அகதிகளாக்கி விடுவதுதான். அகதிகளாக்குவது என்பது யூதர்களின் ஒடுக்குமுறையின் ஒரு திட்டம். இப்போது இந்திய அரசானது இலங்கை அரசின் மேற்படி திட்டத்தை ஏற்று, தமிழ் மக்களை அகதிகளாக்க திட்டமிட்டுள்ளது.

1940 களின் பிற் பகுதியில் ஜெனரல் பிறிச் என்பவர், மலேசியாவில் போராட்டத்தை ஒடுக்க, மலேசியச் சீனர்களை, மலேசியாவின் வேறொரு பகுதியில் அகதிகளாக்கி குடியேற்றினார். இந்நடவடிக்கையானது, வரலாற்றில் ஓர் வெறுக்கத் தக்க அம்சமாக, இன்று வரலாற்று ஆசிரியர்களால் நினைவு கூரப்படுகின்றது. இத்தகைய ஓர் வரலாற்றுக் களங்கத்தை இந்திய மக்களும் தம் முகத்தில் தாமே பூசிக்கொள்ளப் போகின்றார்களா?

## (II) ஒடுக்கு முறைக்கு, அனுமதியும், அங்கிகாரமும் வழங்குவது

தமிழ் மக்களை சிறிலங்கா அரசு அழித்தொழிக்கின்றது என உலக மனிதநேய ஸ்தாபனங்கள் சிறிலங்கா அரசை சாடுகின்றன. அரசின் இராணுவ நடவடிக்கைகளினாலும், விமானக் குண்டுத் தாக்குதல்களினாலும் மக்கள் கொல்லப்படுவதாக கண்டனங்கள் எழுகின்றன. இக் கண்டனத்தைத் தவிர்த்துக்

13ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.கோட்டையை......

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

### போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

தொலைத் தொடர்புக் கட்டிடத்திலிருந்து பண்ணைச் சந்திக் காவலரணுக்கு உதவிகள் செல்வதைத் தடுப்பதற்காக மூன்று போர்விமானங்கள் தொலைத் தொடர்பு நிலையப் பகுதியில் மாறி மாறி குண்டுகளை வீசத் தொடங்கின.

அவ்விமானங்கள் குண்டுகளை வீசிக்கொண்டிருக்க பண்ணைச் சந்தி அரணை நோக்கி முன்னே வந்த இராணுவத்தினரும் எமது துப்பாக்கிகளுக்கு இரையாகிக் கொண்டு வந்தனர். பண்ணைச் சந்தியிலுள்ள எமது நிலைக்கு 5-6 யார் முன்னாலுள்ள காப்பிடப் பகுதியில் வந்து நிலை எடுத்திருந்தும் அரணைக் கைப்பற்ற முடியாது தடுக்கப்பட்டனர்.

புலிகள், காற்றைக் காப்பரணாக்கி உயிரை ரவைகளாக்கி எதிரியுடன் போரிட்டுக்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் எதிரி விமானமொன்று ஆகாயத்தில் நாம் விரித்திருந்த ரவைக்குடையைப் பிய்த்தபடி கீழேவந்து சரிநேராக எமது நிலைகளைத் தாக்கத்துவங்கியது.

இச்சண்டையில் ஈடுபட்டிருந்த புலிவீரன் ஒருவன் தெரிவித்தான்- சுமார் 11.15 மணி இருக்கும். காது செவிடுபடும்படியான குண்டுச் சத்தங்களின் மத்தியிலும் விமானங்களின் இரைச்சல் - மிக மிகத் தாளப்பறப்பதற்கான அறிகுறியுடன் கேட்டது.

பிடரிப்பக்கம் வந்து மோதுவதைப் போன்று மிகவும் தாளப்பறந்து குண்டு வீசுவதும், பின்னர் காணாமல் போவதுமாக இருந்தது.

இந்தச் சத்தத்திற்குச் செவிசாய்த்து அரணை விட்டு வெளியே வந்து பார்க்க அவகாசம் இருக்கவில்லை.

இரண்டு, மூன்று தடவைகள் அவ்விதமாகப் பதிந்து தாக்குவதும் பின்னர் மேலெழும்பும் சத்தமும் கேட்டது. இறுதியாக உறுமியபடி பின்புறத்திலிருந்து எமது நிலைகளை நோக்கி வந்த விமானம் வழமைக்கு மாறாக பண்ணைக்கடல் பக்கமாக வித்தியாசமான ஒலியை எழுப்பியபடி சென்றது. பின்னர் எந்த விமானத்தின் ஒலியும் எமக்குக் கேட்கவில்லை.

''ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு'' என்பதைப் போல, தொலைத்தொடர்பு நிலையத்துக்கு அப்பால் ஒரு மூலையில் உருமறைப்புச் செய்தபடி விமான எதிர்ப்புத் துப்பாக்கியுடனிருந்த ஒரு தோழனுக்கு இரை கிடைத்துவிட்டது.

அவ்விமானம், தமிழீழ மண்ணில் தாளப்பறந்ததற்கான தண்டனையைப் பெற்று பண்ணைக் கடலுக்குள் குப்புற விழுந்து விட்டது.

பண்ணை வீதிக்குக் கிழக்குப் பகுதியில், கோட்டைக்கு நேரே முன்னால் சுமார் 1000 யார் தொலைவில் வீழ்ந்த அதன் பாகங்கள் சிலவற்றை மறுநாள் எமது கடற்புலிகள் கரை சேர்த்தனர்.

விமானம் வீழ்த்தப்பட்டவுடன் சிங்களப் படைக்கு இருந்த இறுதி நம்பிக்கையும் அற்றுப்போக பண்ணைச் சந்திப் பக்கமாக நகர்ந்துவந்த இராணுவத்தினரில் எஞ்சியவர்கள் இறந்தவர்களின் உடல்களையும், ஆயுதங்களையும் விட்டுவிட்டு கோட்டையின் பின்புறத்தை நோக்கி பின்வாங்கினர்.

இது இவ்வாறிருக்க பொலிஸ் நிலையப் பகுதி அரண்களைப் பார்ப்போம்.



சுட்டு வீழ்த்தப்பட்ட சிறீலங்கா வான் படைக்குச் சொந்தமான போர்விமானத்தின் சிதைவுகளில் ஒரு பகுதி

அதிகாலை 6.00 மணிக்குத் தொடங்கி ஒரு சில நிமிடங்களில் கோட்டையை அடைந்துவிடலாம் என்ற நம்பிக்கையுடன் புறப்பட்ட படகுகளில் மூழ்கடிக்கப்பட்டவை தவிர ஏனையவை கோட்டையை வந்தடைய சுமார் ஒரு மணி நேரத்திற்கும் அதிகம் சென்றது.

பண்ணைச் சந்திக் காவலரணைக் கைப்பற்றச் சென்றதைப்போலவே மண்டை தீவிலிருந்துவந்த இராணுவத்தினரில் சிலர் பொலிஸ் நிலையக் கட்டிடங்களையும் கைப்பற்ற கோட்டையின் பின்புறமுள்ள கடற்கரை வீதியால் செல்ல முயன்றனர்

எமது மிதிவெடிகளில் சிக்கியும் பொலிஸ் நிலையக் காவல் அரண்களிலிருந்தும், விளையாட்டரங்குக் காவல் அரணுக்குள்ளிருந்தும் முழங்கிய எமது துப்பாக்கிகளுக்கும் ஒவ்வொருவராக விழத் தொடங்கினார்கள்.

ஒரு மணிநேரமாக மண்டைதீவிலிருந்தும் கடலிலிருந்தும், கோட்டையிலிருந்தும், விமானத்திலிருந்தும் ஏவப்பட்ட குண்டுகளினால் எமது காவலரண்களில் சில உடைந்தேவிட்டன.

உடைந்து குவிந்த அந்தக் காவலரண்களையே காப்பரண்களாக்கி புலிகள் போரிட்டனர்.

மழைபோல் பொழிந்த எறிகணை வீச்சுகளினாலும், பீரங்கிக் குண்டுகளினாலும் இப்பகுதி அரண்களில் நின்ற பலர் காயமடைந்துவிட்டனர். உடனடியாக அவர்களது இடத்தை நிரப்பி நின்று போரிடுவதற்காக மேலதிக போராளிகள் அனுப்பப்பட்டனர். காயமடைந்த போராளிகள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டனர்.

பொலிஸ் நிலையப்பக்கமருந்து எதிரிக்கு கடுமையான எதிர்ப்பைக் கொடுத்து அவனது முன்னேற்றத்தை தடுத்தபடி இருந்த காவல் அரண் ஒன்று எதிரியின் பீரங்கித் தாக்குதலால் சரிந்து வீழ்ந்து விட்டது. கப்டன் ஆனந்தபாபுவின் தலைமையில் நின்று திரமுடன் போராடிக் கொண்டிருந்த புலிகள் அதற்குள் சிக்கி விட்டனர்.

எதிரிக்குச் சவாலாக இருந்த எமது காவல் அரணொன்று அழிக்கப்பட்ட திருப்தியில் எதிரி மீண்டும் ஒரு முறை ஒரு புதிய நகர்வை எடுக்கத் தீர்மானித்தான்.

இதே சமயம் இந்தக் கோட்டை முகாம் முற்றுகைக்குப் பொறுப்பாக இருந்த புலிவீரன், சுரேஸ், குண்டு பட்டுக் காயமடைகின்றான். (இந்திய இராணுவத்துடனான போரில் வவுனியாக் காட்டில் ஒரு குண்டு வெடிப்பில் சிக்கிய சுரேஸ் தனது ஒரு கையை இழந்தது குறிப்பிடத்தக்கது)

இவனுக்குப் பதிலாகப் புதிய புலிவீரன் ஒருவன் போர் முனைக்கு அனுப்பப்படுகின்றான்.

நேரம் பி.ப 1 00 மணியைத் தாண்டிவிட்டது.

இந்த நிலையில்தான் கோட்டைக்குள்ளிருந்து ஒரு இராணுவ கவச வண்டி வந்து கொண்டிருந்தது

மண்மூடைகள் அடுக்கப்பட்டு உள்ளே சுமார் 10 இராணுவத்தினரை ஏற்றியபடி பொலிஸ் நிலையக் கட்டிடத்திற்குள். உடைக்கப்பட்ட கப்டன் ஆனந்தபாபுவின் காவலரணையும் தாண்டி உள்ளே சென்று நின்றது. அந்தவண்டியை காப்பரணாக்கிக் கொண்டு பல இராணுவத்தினரும் எமது நிலைகளுக்குள் வரமுயன்றனர்.

ஏறக்குறைய பொலிஸ் நிலையக் கட்டடங்கள் அனைத்துமே உடைந்து விட்டன. எமது பிரதான காவல் அரண் ஒன்றும் சரிந்துவிட்டது இனி இந்தக் கட்டடங்களுக்குள் மனிதர்கள் இருக்கமுடியாது எனக் கருதிக் கொண்டே இராணுவத்தினர் அந்த இறுதி முயற்சியை எடுத்தனர்.

ஆனால் உடைந்த சிதைவுகளுக்குள்ளே இருந்து புலிகள் எழுந்தார்கள். இராணுவ வாகனத்தில் வந்தவர்கள் தாக்கத் தொடங்கு முன்னர் தாக்கப்பட்டனர்.

மிரண்ட இராணுவத்தினர் கோட்டைக்குள்ளே ஓட எத்தனித்தனர். விளையாட்டரங்கில் இருந்த புலிவீரர்களின் துப்பாக்கிகள் இயங்கித் தணிந்தபோது பொலிஸ் நிலைய வாசலிலேயே 7 இராணுவத்தினர் சுருண்டு விழுந்தனர்

எஞ்சியவர்கள் காயங்களுடன் கோட்டைக்குள்ளே ஓடித்தப்பிவிட்டனர்.

எதிரியின் இறுதி முயற்சியும் முறியடிக்கப்பட்டுவிட்டது. எதிரியின் மூக்குநுனியின் முன்னாலேயே அவனது சகபாடிகளின் சடலங்கள் கிடந்தன. ஆனால் அவனால் அதை எடுக்க முடியவில்லை.

நேரம் மூன்று மணியையும் தாண்டிவிட்டது. சிறிது நேரத்தில் பறந்து வந்த அவ்ரோ விமானமொன்று எமது காவல் அரண்களை அண்டிய யாழ் நகரின் மத்திய பகுதிகளில் ஒருவகை இரசாயனக் குண்டுகளை வீசத் தொடங்கியது.

மாலை 5 30 மணிவரை 25 ற்கும் மேற்பட்ட இரசாயனக் குண்டுகளை நகர்மீது வீசி தனது ஆத்திரத்தை தீர்த்துக் கொண்டது.

தான் போக வழியில்லாத மூஞ்சூறு விளக்குமாற்றையும் காவிக் கொண்டு போனதைப் போல.

கோட்டையை மீட்க வந்த இராணுவம் கோட்டைக்குள்ளே மாட்டிக் கொண்டு கோட்டை முகாமுக்குள் சிக்குண்டு கிடந்தவர்களுக்கு மேலும் பாரமாகியது.

அன்று தொடக்கம் இரவு, பகல் என்ற பேதமின்றி தொடர்ச்சியாகக் கோட்டை தாக்கப்பட்டது.

முதல் நாள் பகல் கோட்டை மதிலோரம் சென்று விட்ட சில படகுகளின் உதவியுடன்

தண்டு வலித்து காயமடைந்த இராணுவத்தினர் இரவில் இருட்டின் உதவியுடன் மண்டைதீவுக்குத் தப்பி ஓடவும் முயன்றனர்.

இவர்கள் இடைநடுவில் பண்ணைக் கடலுக்குள் கடற்புலிகளினால் பலதடவைகள் தாக்கப்பட்டனர்.

''பாதுகாப்பான பகுதி'' என எதிரி கருதிய மண்டைதீவை நோக்கியிருந்த கோட்டையின் கடற்கரைப்பகுதிகளுக்குள்ளும் தினமும் இரவில் இராணுவத்தினர் மீது தாக்குதல்களை நடாத்தினோம்.

எதிரிகளை மலைக்கச் செய்யும் வகையில் தரையில் எவ்விதம் தாக்கப்பட்டார்களோ அதைப்போலவே கடலிலும் தாக்கப்பட்டார்கள்.

முன்னரே போட்ட திட்டத்தின்படி தனது படைவீரர்கள் யாழ் நகரத்தைக் கைப்பற்றி விடுவார்கள் என்ற அதீத நம்பிக்கையில் சிறீலங்கா அரசியல் தலைவர்கள் கோட்டை கைப்பற்றப்பட்டதாக வெற்றிப் பிரகடனங்களைச் செய்தபடி இருக்க.

இங்கே:.. மதில்மீது காவல் கடமைக்கு வரும் ஒவ்வொரு சிப்பாயும் புலிகளை காவல் காத்ததுடன் புலிகளின் காவல் அரண்களுக்கு அருகில் செத்துக்கிடந்த தனது சகபாடிகளின் அழுகிய உடல்களை எடுக்கத் திராணி அற்று பச்சாதாபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன.

எதிரியினது குண்டுவீச்சுக்களினால் சிதைக்கப்பட்டுக் கிடந்த எமது காவல் அரண்கள் ஒவ்வொரு விடிகாலையிலும் புதிய பொலிவு பெற்று வருவதைக் கண்டு எதிரி திகைத்திருப்பான்.

திலீபனது 3வது நினைவு நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது அந்த நாளை நினைத்து எதிரி கலங்கிக் கொண்டிருந்தான்.

கோட்டை தாக்கப்படப் போகின்றது. என எதிர்பார்த்தான்.

கோட்டையை விட்டுத்தப்பி ஓடுவதற்குத் தீர்மானித்து மண்டைதீவை நோக்கியிருந்த கடற்கரையோரமாக சீமெந்திடப்பட்டு மூடிவைக்கப்பட்டிருந்த பின் கதவு அகற்றப்பட்டு (முன்னர் கழிவுகள் அகற்றப்பயன்பட்டது) தயாராக வைக்கப்பட்டிருந்தது.

### விடிந்தால் திலீபனின் மூன்றாவது ஆண்டு நினைவு நாள்

எதிரி நினைத்திருந்ததைப் போலவே இரவு 12-00 மணியளவில் எமது தயாரிப்பான சக்தி வாய்ந்த ஏறிகணைகள் கோட்டைக்குள் வீசப்பட்டன பாரிய சத்தத்துடன் கொத்தளங்கள் சரியும் வண்ணம் எறிகணைகள் வீழ்ந்து வெடித்த அதே சமயம் கோட்டையின் பின்புற வாசல் உடைக்கப்பட்டு தப்பி ஓடும் படலம் ஆரம்பமாகியது.

கோட்டைப் படை எடுப்பு முறியடிக்கப்பட்டவுடன் கோட்டைக்குள் சிக்கிக்கிடந்த இராணுவத்தினர் தப்பி ஓட நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்பது எமக்கு நன்கு தெரியும்.

எனவே கடற்கரையை நன்கு நோட்டமிட்டபடியே இருந்தோம். இராணுவத்தினர் ஒரு சில படகுகள் மூலம் தண்டுவலித்தும், கடலுக்கூடாக நடந்தும் தப்பி ஓடுவதைக் கண்டு விட்டு கடலுக்குள் வைத்தே தாக்கத் தொடங்கினோம்.

இவர்களிடமிருந்து ஆயுதங்களைப் பறிக்கவேண்டும், இவர்களை தப்பி ஓடவிடக் கூடாது என்று சத்தமிட்டபடி கடற்கரைப்பக்கம் ஓடிச் சென்று இராணுவத்தினரை வழிமறித்து தாக்கிய நகுலன் எதிரியின் குண்டு பட்டு வீழ்ந்தான்.

இன்னொருமுனையில் சிசிலியா, ரகு - வீரமரணமடைகின்றார்கள்.

திசை மாறி கடலுக்கூடாக நடந்தும், நீந்தியும் சென்ற இராணுவத்தினரை மண்டைதீவிலிருந்த இராணுவத்தினர் அடையாள வெளிச்சங்களைப் பாச்சி தம்பக்கம் வருமாறு சைகை செய்தபடி இருந்தனர்.

இதுவரை காலமும் எமது மக்களை ஆக்கிரமித்து வைத்திருக்க உதவிய கூடாரங்களில் ஒன்றைக் கைவிட்டு நடுநிசியில் எதிரி தப்பி ஓடிக் கொண்டிருந்தான்.

இம் மண்ணின் மைந்தர்களுள் எத்தனையோபேரை விழுங்கி ஏப்பமிட்ட யாழ் - கோட்டை - இருளில் - வெறுமனே கிடந்தது.

370 வருட சரித்திரத்தில், ஒரு நாளுமே இல்லாதவாறு, ஒரு பின்னிரவு, கோட்டை மனித சஞ்சாரம் அற்றுக்கிடந்தது.

26 9-90 விடியற்காலையில், எதிரி விதைத்த பொறிவெடிகளை அறுவடை செய்தபடி புலிவீரர்கள் கோட்டைக்குள் புகுந்து கொண்டிருந்தார்கள்.

கோட்டையைச் சூழ முற்றுகையில் ஈடுபட்டிருந்த புலிவீரர்கள் கோட்டையை உற்று நோக்கியபடி இருந்தார்கள்.

கோட்டையைப்போலவே அவர்களுடைய முகங்களும் புதிய தோற்றத்துடன் காணப்படுகின்றன.

அவர்களுடைய பார்வைகள் ஆயிரம் கதைகளைக் கூறுகின்றன.

கோட்டைமீதிருந்த அவர்களது பார்வைகள் மெதுமெதுவாக மதிலடிவாரங்களை நோக்குகின்றன...

அகழிகளை நோக்குகின்றன..

5-8-90 அன்று, சுதந்திரத்தை மீட்கச் சென்ற வரிப்புலி உடைகள் சில ஆங்காங்கே கிடந்தன. அவற்றுடன், அடக்குமுறைக்கு வேலிபோடச் சென்ற புலிகளின் எலும்புகளும் கிடந்தன.

காவல் அரண்கள் மீது ஏறி நடந்த புலிக்ள் அவற்றைச் சேகரிக்கின்றார்கள்.

சரியாக 10-48 மணிக்கு - இது திலிபன் வீரமரணமெய்திய நேரம் - யாழ் மாவட்டத் தளபதி திரு. பானு கோட்டை மீது புலிக்கொடி ஏற்றுகின்றார்.

**கோட்டை வெற்றிச் செய்தியுடன், வீழ்ந்துவிட்டபுலி வீரர் களின் எலும்புகளும் மக்களிடம் சுமந்து செல்லப் படுகின்றன.**

## ஒரு போராளியின்,....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிலிருந்து இடம்பெயர்ந்து வந்த எமது போராளியின் குடும்பத்தவர்களில் ஒருவர் செல்வராசா மாஸ்டர் இப்போது எங்கே நிற்கின்றார் எனக்கு அவரை நன்றாகத் தெரியும் என்றார்.

இப்படி போராளிகளுக்கு மட்டுமன்றி மக்களுக்கும் மாஸ்டரைப் பற்றி நன்கு தெரியும்.

அந்த செல்வராசா மாஸ்டர் இன்று எம்முடன் இல்லை.

- ஆனந்

செல்வராசா மாஸ்டர் ஒரு ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர் சொந்த இடம், காங்கேசன்துறை. தந்தையின் பெயர் சின்னத்துரை அவருக்கு இரண்டு கண்களும் தெரியாது. அந்த நிலையில் தான் செல்வராசா மாஸ்டர் தன்னை போராட்டத்துக்கு அர்ப்பணித்தார்.

இவரது இயற் பெயர் செல்வராசா ஆனால் இயக்கம் இவருக்கு இட்ட பெயர் அன்பு. மாஸ்டருடன் சேர்ந்து இயக்கத்துக்கு வந்த அவரது ஊர்நண்பர்களால் செல்வராசா அண்ணை என அழைக்கப்பட்டவர். காலகதியில் பயிற்சி முகாமின் பயிற்சி ஆசிரியனாக வந்த பின்னர், அவரது மாணவர்கள் இட்ட பெயர்தான் செல்வராசா மாஸ்டர் என்பதாகும்.

1983-ம் ஆண்டு த. வி. புலிகள் இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்ட மாஸ்டர் எமது இயக்கத்தின் 3வது பயிற்சி முகாமில் பயிற்சியை பெற்றிருந்தார்.

இவரது பயிற்சிமுகாமினது பொறுப்பாளராக லெப். கேர். பொன்னம்மான் இருக்க பயிற்சியாளராக லெப். கேர். புலேந்தி அம்மான் இருந்தார்.

பயிற்சி காலகட்டத்தின் போதே செல்வராசா மாஸ்டர் திறமைபெற்று சக தோழர்கள் மத்தியில் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தார்.

பயிற்சி நேரத்தின்போதே இவரது திறமையை, முயற்சியை, கட்டுப்பாடுகளுக்கு உட்படும் தன்மையை அவதானித்த புலேந்தி அம்மான் 3 வது பயிற்சி முகாமின் மாணவனாக இருந்த செல்வராசா மாஸ்டரை அதே பயிற்சிமுகாமின் பகுதிநேரப் பயிற்சியாளனாக இறுதியில் மாற்றிவைத்திருந்தார். அந்த அளவுக்கு மாஸ்டர் உடற் பயிற்சியில் ஒரு புலியாக இருந்தார்.

பின்னர் நான்காவது பயிற்சிமுகாமின் இறுதிக்கட்டத்தில் செல்வராசா மாஸ்டரே பயிற்சியாளனாக இருந்தார்.

எமது இயக்கத்தில் பொன்னம்மானுக்கு அடுத்தபடியாக ஏராளமான போராளிகளை உருவாக்கியது செல்வராசா மாஸ்டர்தான்.

பலாலியில் ......... அன்று செல்வராசா மாஸ்டர் வீரமரணமடைந்து விட்டார். செம்மண்ணான கட்டுவன் பகுதி மாஸ்டரின் குருதி பட்டு மேலும் செம்மையடைந்து விட்டது.

செல்வராசா மாஸ்டரின் கரத்தால் இனித்துப்பாக்கியை இயக்க முடியாதுதான்.

ஆனால் மாஸ்டர் உருவாக்கிவிட்ட ஆயிரம் ஆயிரம் போராளிகளின் கரத்திலிருந்து துப்பாக்கிகள் ஆக்கிரமிப்பாளரின் அரண்களை நோக்கி முழங்கிக் கொண்டே இருக்கின்றது. அந்த துப்பாக்கிவெடிச் சத்தங்கள் தான் மாஸ்டருக்கு கிடைக்கும் அஞ்சலிக்கீதமாம்.

- தினேஸ்.

## தமிழர்களை.....

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொல்வதற்காக, மக்கள் வேறு, போராளிகள் வேறு என்று அரசு தரம் பிரித்து மக்களை அகதிகளாக்கி விட்டு போராளிகளை அழிப்பதாகக் கூறி பெரும் தாக்குதல்களை எவ்வித உலகக் கண்டனமுமின்றி அரசு செய்ய எண்ணியுள்ளது. இதற்கு இந்திய அரசு அனுமதியும், அங்கீகாரமும் அளிக்கின்றது.

இதில் இரண்டு விடயங்கள் கவனிக்கப்படல் வேண்டும்.

அ) தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டதனால் தான் போராட்டம் எழுந்தது. எனவே மக்களிலிருந்து போராளிகளை எவ்வாறு வேறுபடுத்த முடியும். அப்படியாயின் இந்திய விடுதலைக்காக போராடிய காந்தி, நேரு போன்றோர் மக்களிலிருந்து வேறுபடுத்தப்பட்டு அழிக்கப்பட்டிருக்க வேண்டியவர்களா?

(ஆ) மக்களை அப்புறப்படுத்தி அகதிகளாக்கிவிட்டு அவர்களது வாழ்விடங்கள்மீது விமானக் குண்டுத்தாக்குதல்களையும், தீ வைப்பு நடவடிக்கைகளையும் படையினர் மேற்கொள்ள இது அனுமதிக்கின்றது. மக்களை அகதிகளாக்கி விட்டு அவர்களின் வாழ்விடங்களை அழிக்கலாமா? இது ஒடுக்குமுறையில்லையா? அவ்வாறாயின் மனிதன் வாழாத இந்தியப் பிரதேசங்களுக்குள் சீனப்படை 1962ம் ஆண்டு புகுந்தது சரியாகுமே! மேலும் வாதத்திற்கு உதாரணமாக எடுத்துக் கொள்வோம். அதாவது ஆட்களை அகற்றிவிட்டு கட்டிடங்களை தாக்குதல் தவறில்லை என்பதுதான். அப்படியாயின் எந்த அத்துமீறலும் நியாயமாகிவிடும்.

### தஞ்சமடைந்தோரையும், விருந்தினரையும், தாக்கிய சிங்கள நாகரீகம்

சிங்கள பேரினவாதிகளின் முழு முதல் நோக்கம் ஈழத் தமிழரை அழிப்பதுதான். முதலில் போராட்டத்தை அழித்துவிட்டு, பின்பு படிப்படியாகத் தமிழினத்தை அழிக்க திட்டமிட்டுள்ளனர். இப்போதைய போராட்டத்தை அழித்துவிட்டு மக்களை அழிப்பதென்பது சிங்கள இனவாதிகளுக்கு எலும்பில்லாத புழுவை நசித்துக் கொல்வது போன்று இலகுவானதாகும்.

1983 ம் ஆண்டு காவலில் வைக்கப்பட்டிருந்த 52 கைதிகளை சிறைக் கூடத்திற்குள் கொலைசெய்தவர்கள், 1985ம் ஆண்டு அநுராதபுரத்தில் இராணுவத்தினரிடம் தஞ்சமடைந்த அப்பாவித் தமிழர்களை, குழந்தைகள், பெண்கள் உட்பட சுட்டுக் கொன்றவர்கள். 1987 ம் ஆண்டு இலங்கைக்கு விருந்தினராக வந்த ராஜீவ்காந்தியை கொல்லும் நோக்குடன் தாக்கியவர்கள், இப்போது தமிழ் மக்களை அகதி முகாம் அமைத்து பாதுகாக்கப் போகின்றார்களாம்.

## திருக்கோணமலைத்...

(4ஆம் பக்கத் தொடர்)

கேள்வி:-

விடுதலைப் புலிகளின் போராடும் சக்தி அதிகரித்துள்ளது என்பது உலக இராணுவ அரசியல் விமர்சகர்களின் அபிப்பிராயமாக உள்ளது திருமலை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்:- உண்மைதான் குறிப்பிட்ட நாட்களில் பெருமளவு இராணுவத்தினரைக் கொன்று ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளோம். இந்தப் பகுதியைப் பொறுத்த வரையில் ஒரு இராணுவ முகாமில் இருந்து இன்னுமொரு இராணுவ முகாமுக்கு செல்வதை மட்டுப்படுத்தி பெரும் சிரமத்தின் மத்தியில் தான் செயல்படுகின்றார்கள். 90க்கு மேற்பட்ட படைமுகாங்கள் இருந்தும் எம்மால் இதைச் சாதிக்கமுடிகின்றது. கடந்த கால அனுபவங்களில் இருந்து பெற்றுக் கொண்ட மனவலிமையினால் மேலும் சிறிலங்கா இராணுவத்தின் செயற்பாடுகளை குறுக்கலாம் என நம்புகின்றேன்.

கேள்வி:-

முஸ்லிம் மக்களுக்கு இந்த நிலையில் நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்.

பதில்:. மதவெறியைத் தூண்டி தமிழ் பேசும் மக்களுக்கிடையே பிளவை ஏற்படுத்தி குறுகிய அரசியல் இலாபம் அடையவிரும்பும் தீய சக்திகளை இனம்கண்டு நிராகரித்து தமிழீழகதந்திரத்துக்கான போராட்டத்தில் இணைந்து செயலாற்ற வேண்டும் எனவும் குறைந்த பட்சமாவது தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக செயற்படாமல் இருக்கும் வண்ணம் அத்தகைய சக்திகளை வேண்டுகிறேன்.

---

### இந்திய அரசிற்கும், மக்களுக்கும் ஒரு வேண்டுகோள்.

1971ம் ஆண்டு பங்களாதேஷ் (அப்போதைய கிழக்குப் பாகிஸ்தான்) மக்கள் ஒரு கோடியினர் அகதிகளாக இந்தியாவிற்குள் புகுந்தனர். இன்று ஈழத்தமிழரை, இலங்கையிலேயே முகாம் அமைத்து அகதியாக்குவது போல, அன்று வங்காளிகளை, பாகிஸ்தானிலேயே அகதி முகாம் அமைக்க இந்திய அரசு ஆவன செய்திருக்கலாமே.

மேலும் தலாய்லாமாவிற்கும், ஒரு இலட்சம் திபெத்தியர்களுக்கும் இந்தியாவில் புகலிடமும், வசதிகளும் அமைத்துக் கொடுத்த இந்திய அரசு திபெத்தியர்களுக்கு சீனாவில் அகதி முகாம் அமைக்க சீன அரசுடன் ஆவன செய்திருக்கலாமே. இப்போதும் இந்தியாவில் இருக்கும் தலாய்லாமாவையும், அவரின் சகாக்களையும் சீனாவில் குடியிருக்க ஏன் ஆவன செய்ய முடியவில்லை.

ஈழத் தமிழர்களை மட்டும் இப்படி திட்டமிட்டு அகதிகளாக்குவது அதற்கு இந்திய அரசு ஒத்துழைப்பது இந்திய தர்மத்திற்கு முரணானது.

இன்றைய நிலையில் இந்திய அரசிடம் தமிழீழ மக்கள் கோருவது எமது போராட்டத்திற்கு உதவி செய்யாவிடினும் உபத்திரவமாவது செய்யாது இருக்க வேண்டும் என்பது தான்.

# மலையகம்வாழ் தமிழர்களே! இதுதான் சரியான தருணம்.

சிறிலங்கா பேரினவாத அரசானது இன்று மும்முனைகளில் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

I. தமிழீழத்துக்கெதிராக மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்பு யுத்தம்.

II. சிங்கள இனத்து இளைஞர்களின் ஜனநாயகம் கோரிய ஆயுதக் கிளர்ச்சி.

III. சகல முனைகளிலிருந்து வரும் பொருளாதார நெருக்கடி என்பவையே அவையாகும்.

இதனால் சிறிலங்கா அரசானது செய்வதறியாது திணறிக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் இன்னும் திறக்கப்படாது கொதிநிலையில், கிடக்கும் நாலாவது போர்முனையைப் பற்றி சிறிலங்கா அரசு அச்சங்கொண்டபடி உள்ளது.

மலையகம் வாழ் தமிழ் மக்கள் தங்களது அடிமை வாழ்வு நிலையை உடைத்தெறியப் போராடுவதே அந்த நான்காவது போர்முனையாகும்.

மலையகம் வாழ் தமிழர்கள் ஓர் நவீன அடிமைத் தொழிலாளர்களாகவே அன்றிலிருந்து இன்றுவரை இலங்கைத்தீவிலிருந்த ஆட்சியாளர்களால் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

பண்டங்கள் தரம்பிரிக்கப்பட்டு ஆளுக்காள் கைமாற்றிக்கொள்வதைப்போல இந்திய அரசும், சிறிலங்கா அரசும் அம் மக்களைப் பங்குபோட்டு வைத்திருக்கின்றன.

ஆகக் குறைந்த பட்சம் இவர்களது அடிப்படை உரிமைகளைப் பற்றிக்கூட எவருமே அக்கறைப்பட்டதில்லை.

மலையகம் வாழ் தமிழ் மக்களுக்கு தமிழீழ மக்கள் சொல்லிக்கொள்வது. இதுதான்.

உரிமைகளை எவருமே தரவிரும்பமாட்டார்கள். நாம்தான் போராடிப் பெற்றுக்கொள்ளவேண்டும். அதற்காகத் தியாகங்கள் புரியத் தயாராக இருக்க வேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டம் இதற்கு நல்ல உதாரணமாகும்.

உங்களது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள இப்பொழுதே போர்க்கொடி தூக்குங்கள்.

இதுதான் சரியான சந்தர்ப்பம்.

இதைவிடச் சிறந்த சந்தர்ப்பம் இனி வராது.

சிறிலங்கா இனவாத அரசின் பொருளாதார பலத்துக்கு முதுகெலும்பாகத் திகழும் உங்களது உழைப்பு உங்களுக்கிருக்கும் மிகப்பெரிய போராட்ட வலு.

அந்த வலுவை நீங்கள் சரிவரப் பயன்படுத்தி ஆகக் குறைந்த பட்சம் உடனடியாக உங்களது அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மலையக மக்களின் தலைமைகள் மௌனமாக இருப்பதும், சிறிலங்கா இனவாத அரசுக்குமுண்டு கொடுப்பதும் வேதனைக்குரிய விடயங்களாகும்.

மலையகம் வாழ் தமிழ் மக்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் கிளர்ந்தெழுவார்களேயானால் அவர்கள் சக்திமிக்க மற்றோர் போர் அணியாக மாறுவார்கள். அதன்மூலம் பலமான நிலையில் இருந்தபடி சிறிலங்கா அரசிடம் உரிமைகளைக் கோரமுடியும்.

அதே சமயம் மலையகம் வாழ் தமிழ் மக்கள், இச் சந்தர்ப்பத்தில் அமைதியாய் இருப்பது தமக்குத் தாமே புதைகுழி அமைப்பதற்கு ஒப்பானதாகும்.

ஏனெனில் தமிழீழத்துடனான யுத்தத்தின் எதிர்விளைவுகளால் கொதிப்புறப்போகும் சிங்கள மக்களைத் திசை திருப்புவதற்காக சிங்கள அரசும், சிங்களப் பேரினவாதிகளும். பலமற்ற நிலையில்இருக்கும் மலையகம் வாழ் தமிழ்மக்கள் மீது தமது இனவெறியைக் கட்டவிழ்த்து விடுவார்கள் என்பது எதிர்பார்க்கக்கூடிய தொன்றாகும்.


இதை மலையகம் வாழ் தமிழர்களின் ஒன்று திரண்ட வலிமை நிலையாலேயே தடுக்கமுடியும்.

அவ்விதமானதொரு வலிமை நிலையை விரைவில் பெறுவதற்கு இதுதான் சரியான சந்தர்ப்பம் ★

# வீர வணக்கம்



கப்டன் அஞ்சனா
வட்டக்கச்சி, கிளிநொச்சி



கப்டன் ஆனந்தபாபு
ஆ. ஜெகதீஸ்வரன்
பூவரசங்குளம், வவுனியா

*13-09-1990 அன்று மண்டைதீவிலிருந்து கோட்டை நோக்கிய சிறிலங்கா அரசின் முப்படைகளினது படை எடுப்பை முறியடித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போரில் களப்பலியாகி கோட்டை முகாமின் உயிர் வாழ்வுக்குச் சாவு மணி அடித்த வீரர்கள்*



குருபரன்
யோகேஸ்வரன்
கொக்குவில் மேற்கு




குணேஸ்
ஜெ. ஜெகநாதன்
மயிலிட்டி



றெஜினோல்ட்
வி. வினோகரன்
மாமூலை, முள்ளியவளை



நிவாஸ்
சி. இராமச்சந்திரன்
வீராடுசேனை மட்டக்களப்பு



றொபின்
பேரின்பராசா கணேஸ்
பரந்தன்



லெப். நெப்போலியன்
ச. விக்னேஸ்வரன்
கொக்குவில் மேற்கு - தாவடி



தமிழ்ச்செல்வன்
பளை



விஜயன்
க. தெய்வேந்திரம்
கரவெட்டி மேற்கு



சுரேன்
சி. சுதாகர்
தம்பலகாமம்
திருக்கோணமலை

எங்கள் உயிரோடும், உதிரத்தோடும் ஒன்றாகக் கலந்துவிட்ட இறுதி இலட்சியமாம் தமிழீழத்தாயகத்தை மீட்டெடுக்கும் புனிதப் போரிலே வீரமரணமடைந்த ஆயிரமாயிரம் வேங்கைகளின் வரிசையில் இங்கே மீளாத்துயிலில் கிடக்கும் வீரவேங்கைகளும் சேர்ந்து கொண்டார்கள். மரணம் இவர்களது பேச்சையும் மூச்சையும் நிறுத்திக் கொண்டதே தவிர இலட்சியத்தை இன்னும் வீச்சாக்கியுள்ளது. இவர்கள் ஆணிவேர் அறுபடாத ஆலமரங்கள். மீண்டும் வேர்விடுவார்கள், விழுதெறிவார்கள் புதிதாகப் பிறக்கும் புலிகளுக்குள்ளே இவர்கள்புகுந்து கொள்வார்கள். நெஞ்சுகனக்கும் தாயகவிடுதலைக்கனவோடு எம்மைப் பிரிந்து செல்லும் இவர்களின் கனவை நாங்கள் நனவாக்குவோம்! என்று இவர்களுக்கு மூட்டும் சிதை நெருப்பின் மீது உறுதியெடுத்துக் கொள்கின்றோம்! தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையையும், வழிகாட்டலையும் ஏற்றுநின்றும், துணிந்துசென்று களமாடியும், வீரமரணமடைந்த இந்த வேங்கைகளுக்கு நாங்கள் வீரவணக்கத்தைச் செலுத்தும் வேளையில், எங்கள் தாயக மீட்புப் போருக்கு மீண்டும் எங்களைத் தயார் படுத்திக் கொள்கின்றோம். ஒருகணநேரம் இந்த வீரர்களுக்காக குனிந்துகொண்ட எங்கள் தலைகளை மீண்டும் நிமிர்த்திக் கொண்டு புனிதப் போருக்குப் புறப்படுகின்றோம்.



சந்திரபாபு
பு. ராகவன்
வல்வெட்டித்துறை



நிக்கலஸ்
சு. ரவி
கப்புது

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**